தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1937-ஜூலை 1.
PAHUTHARIVU ("REASON")
மலர் 3. இதழ் 3.

பகுத்தறிவு

வாரம் ஒரு முறை வெளியீடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், காடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

சர்ப்பத்தடை வேண்டும். (பாட்டு)
(அ. சிதம்பரநாத பாவலர்) 1
கல்வழி எது? (இங்கர்சால்) 3
இந்திய ஸ்திரீகள் 16
பரிதாபத்துக்குரிய பார்வதி! (கதை)
(அ. பொன்னம்பலனார்) 25
இஸ்லாமும் பெண்களும் (நூர்ஜகான்) 34
கல்வியும் கைத்தொழிலும் (தி வே. அ) 38
மூர்த்திஸ்தலபூஜையும் தீர்த்த யாத்திரையும் (கைவல்யம்) 43
மனமென்பதொன்றுண்டோ? (ம. சிங்காரவேலு) 50
மடமையா? அறிவுடமையா?
(சாக்கோட்டை எஸ் ஆர். சாமி) 54
தெய்வவரி 60
விநவை விம்மல்! (எம். இராஜாராணிக்கம்) 63

பூந்தமிழ்.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. ஜூலை 1. { இதழ் 3.

கர்ப்பத்தடை வேண்டும்.

(சுத்தமல்லி அ. சிதம்பரநாத பாவலர்)

(அறுசீரடி விருத்தம்.)

1. நடுப்பகற் போழ்து சற்றே
நடந்தொரு வழியே சென்றேன்
கடம்பகை தணிப்பதாங்கு
கருக்கினானனலி யென்னை
இடும்பைகூர்ந் தாழாலே
இசைந்தொருநிழலிற்குந்தக்
கொடுந்துய ராழ்ந்துவேமங்
குலைந்துள குடும்பங்கண்டேன்.

2. இருபது வயதின் கொம்மை
எழில்படை புனித நங்கை
உருகிய வாக்கையோடும்
உழன்றவாழ் வெடுத்துக்காட்டும்
குருகிய சேய்களேழும்
கொடும்பசிக் கணவனோடும்
பருவரலுருவாய்க் கர்ப்பப்
பிணியொடு காட்சி தந்தாள்.

3. பசிப்பிணியடைந்து சோர்ந்த
பட்டினியாளன் கூழைப்
புசிக்கவென்றெழுந்த போழ்து
புதல்வர்க ளவனைச் சூழ்ந்து
பிசிக்கென இளங்கையேந்தப்
பெரும்பசியடக்கியீந்து
கசிந்தன னல்கல் தோயிற்
கதியிலாமடந்தை கண்டாள்.

4. கணவனின் முகத்தைப் பார்த்தாள்
கலங்கினாள்! கண்ணீர் விட்டாள்
உணர்வினியிழந்தாளெவ்வ
மோங்கினாள்! உள்ளஞ் சோர்ந்தாள்
நுணங்கரல் வாழ்வை உன்னி
நொந்தனள் சேய்கள் மீது
அணங்கெழுத்தழுவி மீண்டும்
அயர்வுகொண்டுருகி வீழ்ந்தாள்.

5. பொருள்பல குவியச்சற்றும்
போக்கிடமில்லாதிடத்து
இருள்பல சூழ்ந்த வாழ்வென்
றினகுறார் சேயர் வேண்டி
மருள்பல மலிந்த யேழை
மடந்தைய ருதரத்துள்ளே
கருப்பல தோன்றி வாழ்வைக்
கலைத்தல் ஏன்? என்று நொந்தாள்.

6. இன்னில இன்பந்தோயும்
இளவயதடைந்த கோதை
பன்னிரு சேய்கள் சூழப்
பாட்டிபோற் கிழடுதட்டி
தன்னெழில் வதனந் தொங்கித்
தளர்த்துளவுடலைத் தாங்கி
இன்னமுமெண்ணிலாத
இட்டளத்துழலுகின்றாள்.

நல் வழி எது?

(இங்கர்சால்)

II.

மூடநம்பிக்கையின் ஆதிக்கம்.

ஜிஹோவாவைத் தவிர ஏனைய கடவுள்கள் எல்லாம் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டவை என்றும் அவைகள் எல்லாம் பொய்யான, மடத்தனமான, குரூரமான தெய்வங்கள் என்றும் பிற மதக்கோயில்களினால் யாதொரு பயனும் விளையாதென்றும் பலிகளும் சடங்குகளும் வீண் செலவு என்றும் பூசாரிகள் எல்லாம் அயோக்கியர்கள் என்றும் அவர்களுடைய பிரார்த்தனைகளுக்கு கடவுள் விடையளிப்பதில்லை யென்றும்ஏழை மக்கள் ஏமாற்றிக்கொள்ளையடிக்கப் படுகிறார்கள் என்றும் கிறிஸ்தவர்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் நம்முடைய கடவுள் பிறமதக் கடவுள்களைவிட மேலானவரா?

நாம் இப்பொழுது சுபிக்ஷமாக இருக்கிறோம்; சுபிக்ஷத்தினால் மனோ தைரியம் ஏற்படுகிறது; எனவே நாம் இப்பொழுது இந்தக் கேள்வி கேட்க ஆற்றலுடையவர்களாயிருக்கிறோம். ஆனால் பூகம்பங்களோ கொள்ளை நோய்களோ உண்டானால் நாம் முழுங்காற்படியிட்டு கண்ணை மூடிக்கொண்டு, சுதந்தரமாகச் சிந்தனை செய்து பாவத்தை மன்னிக்கவேண்டுமென்று கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்கிறோம். பஞ்சம் நம்பிக்கையின் நண்பன் என்றும் துன்பங்கள் மூடபக்தியின் உயிர் நாடியென்றும் நமக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது பூகம்பமோ, கொள்ளை நோயோ இல்லை; பூமி அமைதியாக இருக்கிறது; எனவே நமது கடவுளின் யோக்கியதையைப்பற்றி இப்பொழுது நாம் தைரியமாக ஆராய்ச்சி செய்யலாம்.

ஒருவனுக்கு இருக்கும் சக்தியைப் பிரயோகம் செய்வதே ஒருவனது ஒழுக்கத்துக்கு கல்ல அத்தாட்சி.

பொறாமை, போர்க்கருவி, கோட்டை, வாள், அறியாமை முதலியவைகளை எந்தக்கடவுளாவது ஆதரிப்பாரா? பீதிக்கு—ஏமாற்றத்துக்கு—நயவஞ்சகத்துக்கட்டுப்படுவாரா? ஒரு கல்ல கடவுள் தன் குழந்தைகளைப் பயமுறுத்துவாரா? அல்லது அவைகளின் அறிவை விருத்தி செய்வாரா? ஒரு நல்ல கடவுள் பகுத்தறிவை ஆதரிப்பாரா? அல்லது மடமையை ஆதரிப்பாரா? நீதியை ஆதரிப்பாரா? அல்லது சுயநலத்தை ஆதரிப்பாரா? சுதந்தரத்தை ஆதரிப்பாரா? அல்லது அடிமைத்தனத்தை ஆதரிப்பாரா?

ஈடன் தோட்டத்திலே வாழ்ந்த நமது ஆதிப்பெற்றோருக்குக்கடவுள் காதலின் சிறப்பைப்பற்றியோ, குழந்தைகளைப்பற்றியோ, கல்வியைப்பற்றியோ, நீதியைப்பற்றியோ, சுதந்தரத்தைப்பற்றியோ எதுவும் கூறவில்லை.

அவருடைய கட்டளையை அவர்கள் மீறியவுடனே அவர் ஒரு காட்டு மிருகத்தைப்போல் வெறிகொண்டவரானார். பூமியை சபித்து ஏவாளை நோக்கி "உன் துன்பங்களை நான் பெருக்குகிறேன். துன்பங்களுக்கிடையில் நீ பிள்ளைகளைப் பெறுவாய். உன் கணவன் உன்னை அடக்கியாளுவான்" என்று சொன்னார். நமது கடவுள் காதலை துன்பங்களுக்கு அடிமையாக்கினார்; மனைவிகளையும் அடிமையாக்கினார்; உலகத்திலுள்ள குடும்பங்களில் எல்லாம் கொடுமை தாண்டவமாடும்படி செய்தார்.

எட்டுப்பேர் நீங்கலாக உலகம் முழுமையும் பிரளயத்துக்கு உள்ளாக்கினார். உலகம் முழுமையும் பிணங்கள் மிதக்கும் எல்லைகாணை முடியாக் கடலாக்கினார்.

உலகத்தையழிக்கப் போவதை யறிந்திருந்தும் உலக முழுதும் ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் அவர் ஏன் நிரப்பிவைத்தார்? அவர்களைச் சீர்திருத்த அவர் ஏன் முயலவில்லை? மக்களைச் சீர்திருத்த முடியாதென்று தெரிந்திருந்தும் ஏன் அவர்களை அவர் சிருஷ்டித்தார்?

நம்முடைய கடவுள் அறிவுடையவராகவும் நல்லவராகவும் இருக்கமுடியுமா?

பிரளயத்துக்குப் பிறகு நம்முடைய கடவுள் யூதர்களைபட்டும் பொறுக்கியெடுத்துக்கொண்டார்; மற்றவர்கள் எல்

லாம் அழியும்படி விட்டார். ஹிந்துக்களை அவர் கவனிக்க வே இல்லை; எகிப்தியர்களை அவர் லக்ஷியம் செய்யவில் லை; பார்சிகளை மதிக்கவே இல்லை; அசீரியர்களை முற் றிலும் மறந்தேவிட்டார்; கிரேக்கர்களை அவர் ஞாபகத் தில் வைக்கவே இல்லை. அப்படி இருந்தும் அவர், அவர் களுக்கெல்லாம் பிதாவாம். கொஞ்சம் பேரை மட்டும் காப் பாற்றிக்கொண்டு மற்றவர்களையெல்லாம் வெறுத்துக் கொண்டு பன்னூற்றாண்டு காலம் அவர் ஒரு வகுப்பாருக்கு மட்டுமே கடவுளாக இருந்து வந்தார். நமது கடவுளுக்கு வானசாஸ்திரத்தைப் பற்றியோ பூகர்ப்ப சாஸ்திரத்தைப் பற்றியோ ஒன்றும் தெரியாது. பூமியின் வடிவைப்பற்றிக் கூட அவர் அறிந்திருக்கவில்லை; கட்சத்திரங்கள் எல்லாம் வெறும் புள்ளிகள் என அவர் எண்ணியிருந்தார்.

நோய்களைப்பற்றியும் அவருக்கு ஒன்றும் தெரியாது. ஓடும் தண்ணீரின்மேல் கொல்லப்பட்ட ஒரு பறவையின் இரத்தம் கல்லை மருந்தென்று அவர் எண்ணியிருந்தான். அவர் பழிக்குப்பழி வாங்கும் குரூராயிருந்தார்; மற்ற வர்களைக் கொலை செய்யத்தன் குழந்தைகளுக்கு அவர் உதவியாக இருந்தார். ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் கொல்லவும் கன்னிகளை மட்டும் கொல் லாமல்வைத்து அவர்களை தம்படை வீரர்களுக்கு அளிக்க வும் அவர் தன் மக்களுக்குக் கட்டளையிட்டார்.

நம்முடைய கடவுள் அடிமை வர்த்தகத்தை ஏற்படுத்தி தமது சகோதரர்களை விலைக்கு வாங்கும்படி தம் மக்க ளுக்கு அவர் கட்டளையிட்டார்; மனைவிகளையும் குழந் தைகளையும் வர்த்தகப் பொருள்களைப்போல் விற்கவும் வாங்கவும் ஏற்பாடு செய்தார். பலதாரமணத்தை அவர் ஆதரித்தார்; மனைவிமாரை புருஷரின் சொந்தச் சொத் தாக்கினார். அரசர்கள் செய்த குற்றத்துக்காக பிரஜை களை நமது கடவுள் கொலை புரிந்தார். குருட்டு நம்பிக் கையினால் அழிந்துபோன மூளையுடையவனையும் பயங் காளியையும் தவிர வேறு அறிவுடைய எவனும் பழைய ஏற் பாட்டை வாசித்தால் நம்முடைய கடவுள் குரூர குணமுள்ள ஒரு மிருகமென்றே முடிவு கூறுவான்.

நமக்கு ஒரு கடவுள் தேவையானால் அவர் கருணை யுடையவராக இருக்கட்டும். கருணை எல்லாருக்கும் இயல்

பாகவுடையது. நீதி செலுத்தும் செங்கோல் ஏழைகளைப் பாதுகாக்குமானால் அதிலிருந்து பல புஷ்பங்கள் உதிர்ந்து விழும். அந்தப் புஷ்பங்களின் மணமே கருணையுடைய கடவுளுக்குப் பிரீதியளிக்கக் கூடியது.

III.

நோய் தீர்க்க இரண்டு வழி.

நோய்களின் தோற்றத்தைப்பற்றியும் பரிகாரத்தைப் பற்றியும் இரண்டு கோட்பாடுகள் இருந்து வந்தன. ஒன்று மதசம்மந்தமானது; மற்றொன்று விஞ்ஞான சாஸ்திர சம்மந்தமானது.

மதக்கோட்பாட்டின்படி வியாதிகள் உண்டாவதற்கு ஆவிகளும் பேய்களுமே காரணமாம்.

தீர்க்கதரிசிகளுக்கும் தெய்வ அருள் பெற்றவர்களுக்கும் பூசாரிகளுக்கும் பேயை ஓட்ட முடியுமாம்.

பிதா குமாரருக்கு மண்ணுலகத்தில் இருந்தபோது பேய்களை ஓட்டுவதே முக்கிய தொழிலாக இருந்து வந்தது.

பல நூற்றாண்டுகாலம் பாதிரிமார் கிறிஸ்துவை பின்பற்றி பேயோட்டும் தொழிலை நடத்தி வந்தார்கள். மத்தியகாலத்தில் லக்ஷக்கான பேய்கள் உடலிலிருந்து ஓட்டப்பட்டன. மந்திரக் கோலாலும் சிலுவைகளாலும்கன்னிமேரி, கிறிஸ்துவின்உருவங்களாலும்பேய்கள் ஓட்டப்பட்டன.நோய்களுக்குத் தெய்வகோபமே காரணமென்றும் தெய்வ அருளினாலே நோய்கள் பரிகரிக்கப்படுமென்றும் வெகுகாலம் நம்பப்பட்டு வந்தது. கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கு பாதிரிமார்கள் தேவதூதர் உருவங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

இயற்கைக் காரணங்களைப்பற்றியோ, பரிகாரங்களைப் பற்றியோ மக்களுக்கு எதுவும் தெரியாமலிருந்தது. எல்லாம் அற்புதங்களாகவும் தேவரகசியங்களாகவுமே மதிக்கப்பட்டு வந்தன. பாதிரிமார் தந்திரசாலிகளாயும் ஜனங்கள் குருட்டு நம்பிக்கையுடையவர்களாயும் இருந்து வந்தனர்.

அப்பால் நோய்களின் தோற்றத்தைப்பற்றியும் காரணங் களைப்பற்றியும் வேறொரு போட்டாடு மெல்ல உருவாகத் தொடங்கிற்று. நோய்களுக்கும் பேய்களே காரணம் என் பதைச் சிலர் மறுக்கத் தொடங்கினார்கள். நோய்கள் இயற் கையாக உண்டாகின்றனவென்றும் இயற்கை முறைகளால் அவைகளை சொல்தப்படுத்தலாமென்றும் பலர் அபிப்பிரா யப்படத் தொடங்கினார்கள். ஆதியில் வைத்தியன் அவ் வளவு அறிவாளியாக இருக்கவில்லை; எனினும் பாதிரிமா ரைவிட அவன் அதிக விஷயங்களை அறிந்திருந்தான். மெல்லமெல்ல வைத்தியன் பாதிரியை எதிர்த்துத் தோற்கடித் தான். நோயாளிகள் வைத்தியனைத் தேடும் வழக்கம் அதிக மாயிற்று. உடலைக் காப்பாற்ற வைத்தியனுக்குச் சக்தி யுண்டென்று சிலர் நம்பினராயினும் ஆத்மாவைக் காப்பாற்ற பலர் பாதிரியையே நாடிச் சென்றனர். நாகரிகம் பெற்ற மதக்கோட்பாடுகளை மக்கள் மறுக்கத் தொடங்கினர். வைத்தியத்துக்கும் பாதிரிக்கும் சம்மந்தமில்லையென்றும் மக்கள் உணர்ந்தனர். கத்தோலிக்க நாடுகளில் உருவாரங் களைக் காட்டியும் பிரார்த்தனைகள் நடத்தியும் ஞானிகளின் எலும்பைக்கொண்டும் புண்ணிய தீர்த்தங்களைக்கொண்டும் நோய்கள் குணப்படுத்தப்பட்டன; ஆனால் பாதிரிமாரோ தங்களுக்கு நோயுண்டானால் அவர்கள் வைத்தியனைத் தேடியே செல்கிறார்கள். கடவுளின் ஏஜண்டான போப்புங் கூட தமது உடலை வைத்தியனிடமே ஒப்படைக்கிறார்.

எனவே விஞ்ஞான சாஸ்திரம் மதக்கோட்பாடுகளை அநேகமாக வென்றுவிட்டது.

பேய்கள் மக்கள் உடலில் புகுவதாக எந்த அறிவாளியும் இப்பொழுது நம்புவதில்லை. எனினும் இப்பொழுதும் கூட நியூயார்க்குப் பட்டணத்தில் கத்தோலிக்கப் பாதிரிமார் கன்னிமேரியின் தாயென மதிக்கப்படும் ஆன் ஞானியின் எலும்பைக்காட்டி நோய்களைச் சொஸ்தப்படுத்தி வருகிறார் கள். அப்பாதிரிகள் சிலர் குருட்டு நம்பிக்கையுடைய பயங் காளிகள்; சிலர் பக்தி வேஷ வஞ்சகர்கள். அவர்களுக்குத் தினையளவாவது அறிவு இருந்திருந்தால், அந்த எலும்பு ஆன் என்ற ஞானியின் எலும்பாயிருக்க முடியாதென்பதை உணர்ந்திருக்கவேண்டும். அது ஒருகால் ஆன் ஞானியின் எலும்பாகவே இருந்தாலும் அது ஏனையோர் எலும்பைப் போலவே இருக்கும் என்றும் நோய்களைச் சொஸ்தப்படுத்

தும் திவ்ய சக்தி அதற்கு இருக்க முடியாதென்றும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். எனினும் அந்த எலும்பைக்காட்டி ஆயிரக்கணக்கான டாலர்களை பாதிரிமார் அறிவற்ற மக்களிடமிருந்து கொள்ளையடித்து வருகிறார்கள். அந்த எலும்பை வைத்திருக்கும் பெட்டியை முத்தமிட அறிவற்ற ஜனங்கள் ஆயிரக்கணக்கான டாலர்களைக் காணிக்கையாகக் கொடுத்து வருகிறார்கள்.

கன்னிமேரியின் தாய் யாரென்று ஆர்ச்பிஷப் காரிஜாலுக்குத் தெரியாது; அம்மட்டோ எவருக்குமே தெரியாது; ஏவராலும் அறியப்படாத அந்தத்தாயின் எலும்பை எவரும் கண்டதில்லை. எலும்பு விஷயம் முழு மோசடியென்பதைப் பாதிரிமாரெல்லாம் அறிந்தே இருக்கிறார்கள். பாமர ஜனங்களை ஏமாற்றி பணம் பறிக்கப்படுவதையும் எல்லாப்பாதிரிமாரும் அறிந்திருக்கிறார்கள். கார்டினல் கிப்பன்சாக்கும் இந்த விஷயம் தெரியும். ஆனால் இந்த மானங்கெட்ட மோசடியை எந்தப்பாதிரியாவது பிஷப்பாவது கார்டினலாவது கண்டிப்பதில்லை. ஆலய தன்மைக்காக பாதிரிமார் இம்மாதிரி மோசடி வர்த்தகம் நடத்துவதை எல்லாரும் பொறுத்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

இதுதான் பாதிரிமார் பின்பற்றும் சத்திய மார்க்கம். அவர்களுக்கு நோயுண்டானால் அந்த எலும்பைத் தீண்டவே மாட்டார்கள்; வைத்தியனுக்குதான் ஆளனுப்புவார்கள்.

இது சம்மந்தமான ஒரு ஜப்பானியக் கதையைக் கூறுகிறேன்.

ஒரு ஞானியின் எலும்புமீது கட்டப்பட்ட ஆலயத்துக்கு ஒரு பாதிரி அதிபதியாக இருந்தார். அந்த எலும்புகளுக்கு நோய்களைக் குணப்படுத்தும் சக்தியிருந்ததாம். எல்லாரும் தொட சௌகரியமிருக்கும்படி அந்த எலும்புகள் ஒரு பீடத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்தன. பீடத்தின் கீழ் உள்ள ஒரு துவாரம் வழியாகக் கையை விட்டு நோயாளிகள் அந்த எலும்பைத் தொடுவார்கள். அநேகமாதமான நோயாளிகள் அந்த எலும்பைத் தொட்டுவிட்டுச் செல்வார்கள்; அந்த எலும்பினால் நன்மையடைந்ததாகப் பலர் நம்பினார்கள்; பிரதிநன்றியாக அநேகர் பெருந்தொகையைக் காணிக்கையாக வழங்கினார்கள்.

ஒருநாள் அந்த ஆலய அதிகாரியான பாதிரி தன் உதவிப் பாதிரியை நோக்கி "மகனே ! ஆலய வருமானம் குறைந்துவிட்டது. கோவில் காரியங்களை நான் தனியாக நடத்திக்கொள்வேன். நீ வேறு இடத்துக்குப்போ. என்னு டைய வெள்ளைக் கோவேறு கழுதையையும் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து உன்னை அனுப்பிவைக்கிறேன்" என்று கூறினான். அப்படியே அந்த இளைஞன் கோவேறு கழுதைமீதேறி வேறிடத்துக்குச் சென்றான். கொஞ்ச நாட்களில் அவனிடமிருந்த பணம் செலவாகி விட்டது; கோவேறுகழுதையும் செத்துப்போய்விட்டது. உடனே அவனுக்கு ஒருயுக்தி தோன்றியது. செத்த கழுதை யைப் பாதையருகே ஒரு இடத்தில் புதைத்தான். பாதை வழிவருவோர் போவோரை நோக்கி "நற்குணமுடைய சகோ தரர்களே ! இங்கு ஒரு புண்ணியவான் சமாதி வைக்கப்பட்டி ருக்கிறார். இந்த சமாதிமீது ஆலயங்கட்டப் பொருளுதவுங் கள்" என்று அவன் மன்றாடிக் கேட்கத் தொடங்கினான்.

அவ்வளவுதான். வெகு சீக்கிரம் ஒரு ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. கழுதையின் எலும்பைத்தோட்டுப் புனி தராக ஆயிரக்கணக்கானவர்கள் பிரதிதினமும் வரத்தொடங் கினார்கள். அந்த இளம்பாதிரி வெகு சீக்கிரத்தில் பெரும் பணக்காரனானான்.

ஒருநாள் தன் பழைய குருவைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. ஒரு பெரிய பரிவாரத் துடன் அவரைப் பார்க்கச் சென்றான். அவன் பழைய ஆல யத்தை அடைந்தபோது அந்தக் கிழட்டுப்பாதிரி ஆலயவாயி லில் உட்கார்ந்துகொண்டு இருந்தான். தன் பழைய உதவிப் பாதிரி வெகு ஆடம்பரத்துடன் வந்திருப்பதைப் பார்த்து அவன் திகைப்படைந்தான். இளைஞன் தன்னை அறிமுகப் படுத்தியதும் கிழவன் ஆச்சரியத்துடன் "மகனே! இத்தனை காலமும் நீ எங்கு சென்றிருந்தாய். நீ வெற்றியடைந்த கதையைச் சொல்லு" என வெகு ஆவலுடன் கேட்டான்.

"ஹா! ஹா! கிழவர்களுக்கு மூளை கிடையாது. இளை ஞர்களுக்குத்தான் மூளையுண்டு; வளருஞ் சக்தியுண்டு. காம் தனிமையாக இருக்கும்போது என் கதையைச் சொல்லு கிறேன்" என இளைஞன் விடையளித்தான்.

கடைசியில் இளைஞன் தன் கதையை ஆதியோடந்த மாகக் கூறி "இளைஞர்களுக்குந்தான் மூளையுண்டு; கிழவர் களுக்கு மூளையில்லை" என்று ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினான் உடனே கிழவன் புன்னகையுடன் "மகனே! ஆத்திரப்படாதே. கிழவருக்கு மூளையில்லையென்று சொல் லாதே. நீயும் நானும் வாழ்ந்து இந்தக் கோயில்—நாம் இருவ ரும் எத்தனையோ அற்புதங்கள் நடத்திய இந்தக் கோயில் உன் கழுதையின் தாயின் எலும்புகளின் மீதுதான் கட்டப் பட்டிருக்கிறது" என விடையளித்தான்.

IV

வேதம், மதம் தோன்ற இரண்டு வழி.

வேதங்களும் மதங்களும் தோன்றியதற்கு இரண்டு வித மான காரணங்கள் கூறப்படுகின்றன.

தெய்வ அருள் பெற்றவர்களால் வேதங்கள் எழுதப்பட் டன; கடவுள் அவர்களுக்கு மதங்களை உபதேசம் செய்தார் என்பது ஒன்று.

வேதங்கள் எல்லாம் தெய்வீக உதவியின்றி மக்களா லேயே எழுதப்பட்டன; மதங்கள் இயல்பாகவே தோன்றியன என்பது மற்றொன்று.

ஆனால் எல்லா தேசத்தாருக்கும் எந்த சாதியாருக்கும் வேதங்களும் தீர்க்கதரிசிகளும் பூசாரிகளும் புரோகிதர்க ளும் கிறிஸ்துகளும் இருப்பதாகவே தெரியவருகிறது. மற் றும் அந்த வேதங்கள் அந்தந்த ஜாதி மக்களாலேயே அவ்வ வர்கள் மனப்போக்கின்படி எழுதப்பட்டிருப்பதையும் அந் தந்த ஜாதியாருக்குரிய தவறுகளும் ஆபாசங்களும் அவை களில் அடங்கியிருப்பதையும் நாம் பார்க்கிறோம. பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் தவிர மற்ற வேதங் கள் எல்லாம் மனிதர்களால் எழுதப்பட்டவையென்றும் கட வுள் அவைகளை உபதேசம் செய்யவில்லையென்றும் கிறிஸ் தவர்கள், பூரணமாக நம்புகிறார்கள். அவர்கள் கூறுவன வெல்லாம் சரியோ, தவறோ; "மற்ற மதங்கள் மனிதரால் உண்டு பண்ணப்பட்டவை' யென்று அவர்கள் கூறுவது சரியே; ஆனால் தம் மதம் மட்டும் கடவுளால் அருளப்பட் டது என்று அவர்கள் கூறுவது மாத்திரம் தவறேயாகும்.

எல்லா ஜாதியாருக்கும் தேசத்தாருக்கும் ஒவ்வொரு மாதிரி மதம் இருந்தே வந்திருக்கிறது. நல்ல தெய்வங்களும் கெட்ட தெய்வங்களும் பேய் பிசாசுகளும் ஆவிகளும் இருப்பதாக அவர்கள் நம்பியே வந்திருக்கிறார்கள். எல்லா மதங்களுக்கும் வணக்கங்களுக்கும் அச்சம் அடிப்படையாக இருப்பதையும் நாம் உணர்கிறோம். எல்லா மதங்களும் வேதங்களும் அறியாமையினாலும் அச்சத்தினாலும் தந்திரத்தினாலும் இயல்பாகவே உண்டாயினவென்றும் நமக்குத் தெரியும். காணிக்கைகள், பலிகள், பிரார்த்தனைகள் முதலியன வீண் என்றும் எந்தக் கடவுளும் அவைகளை ஒப்புக்கொள்ளவோ மக்களுக்குப் பிரதி பலனாக நன்மை செய்யவோ இல்லையென்றும் நாம் அறிவோம்.

கொஞ்ச காலத்துக்கு முன்னே யுத்தங்களில் பிரார்த்தனை மூலம் மக்கள் வெற்றி பெற்று வந்தனர். பாதிரிமார் கடவுள் மூலம் வெற்றியளித்து வந்தனர். இப்பொழுது எந்த அறிவாளியும் பிரார்த்தனை மூலம் போரில் வெற்றிபெற விரும்பவில்லை. மக்களது விருப்பு வெறுப்புகளை மதியாமல் இயற்கை தன் போக்கில் இயங்கிக்கொண்டு இருப்பதை அறிவாளிகள் உணர்ந்துவிட்டார்கள். மக்களை லக்ஷியம் செய்யாமலே மேகங்கள் வான மண்டலத்தில் மிதப்பதையும், காற்று வீசுவதையும், மழை பெய்வதையும், சூரியன் பிரகாசிப்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டுவிட்டார்கள். எனினும் லக்ஷக்கணக்கானபேர் இப்பொழுதும்பிரார்த்தனை செய்கிறார்கள்; கடவுளருளால் பாதுகாப்புப் பெறலாமென்று நம்புகிறார்கள்; தமக்கு நோய்களும் துன்பங்களும் வராமல் கடவுள் காப்பாற்றுவார் என்றும் மனப்பால் குடிக்கிறார்கள். வருஷா வருஷம் தவறாமல் ஒரே மாதிரி பிரார்த்தனை நடத்திக்கொண்டேயிருக்கிறார்கள்; எனினும் மக்கள் துன்பங்கள் ஒழியவில்லை; குறைபாடுகள் நீங்கவில்லை.

எப்பொழுதாவது நற்குணமுடையவர்கள் ஒரு நல்ல காரியம் செய்தால் பாதிரிமார் அதற்காகக் கடவுளைப் பாராட்டுகிறார்கள்; ஆனால் யாராவது தீமை செய்தால் தீமை செய்தவன் மீது பழியைப் போட்டு விடுகிறார்கள்; கடவுளைக் குறை கூறுவதில்லை.

பிரார்த்தனை ஒருதொழில்—வர்த்தகமாகவும் வயிற்றுப் பிழைப்பு மார்க்கமாகவும் ஆகிவிட்டது. பகிரங்கமாகப் பிரார்த்தனை நடத்தினாற்றான் பாதிரிமாருக்குத் திருப்தி

ஏற்படுகிறது. அவர்களில் பெரும்பாலார் தங்களுடைய கடவுள்களுக்கு மிக வேண்டியவர்களாயிருக்கிறார்கள். எல்லா விஷயங்களும் கடவுளுக்குத் தெரியும் என நம்பி ஜனங்கள் விருப்பங்களையும் தேவைகளையும் கடவுளுக்கு எடுத்துக் கூறி என்ன செய்யவேண்டும், இன்னகாலத்துச் செய்ய வேண்டும் என்றும் யோசனை கூறுகிறார்கள். தன் பெருமைக்காகச் சில காரியங்கள் செய்யவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறார்கள். அசாத்தியமான காரியங்கள் சாதிக்கவேண்டுமென்றே அவர்கள் பல பொழுது பிரார்த்தனை செய்கிறார்கள்.

எல்லா மதங்களும் வேதங்களும் மக்களால் உண்டாக்கப்பட்டனவென்றும் இயற்கைக்கு மேலான எதுவும் மக்களுக்கு வேதங்களை உபதேசம் செய்யவில்லை என்றும் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் பொய் அல்லது சம்பவம் நிகழ்ந்த பிறகு கட்டி விடப்பட்ட கதையென்றும் அற்புதங்கள் எதுவுமே நடைபெறவில்லை, நடைபெறவும் முடியாது என்றும் எந்தக் கடவுளும் தன்னை மனிதன் வணங்க வேண்டுமென்றோ, ஆதரிக்கவேண்டுமென்றோ விரும்பவில்லை யென்றும் எத்தகைய பிரார்த்தனையினாலும் வானத்திலிருந்து ஒருதுளி மழைகூடப் பெய்யவில்லை யென்றும் சித்தனை சக்தியுடைய மக்களுக்கெல்லாம் இப்பொழுது தெரிந்து விட்டது. எந்தப் பிரார்த்தனையினாலும் இதுவரை பெருவெள்ளம் நிற்கவில்லை; கடல் கொந்தளிப்பு அடங்கவில்லை; கொடுங்காற்று தடுக்கப்படவில்லை. எந்தப் பிரார்த்தனையினாலும் வறண்ட நாவுக்கு நீரும் பசித்த வயிறுக்குச் சோறும் கிடைக்கவில்லை. எந்தப் பிரார்த்தனையும் கொள்ளை நோய்களையும் பூகம்பங்களையும் எரிமலை வெடிப்பையும் தடுக்கவில்லை. எந்தப் பிரார்த்தனையும் குற்றமற்றவர்களைக் காப்பாற்றவில்லை; தூக்கிக்கப்படுகிறவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை; சிறைக்கைதிகளை விடுதலை செய்யவில்லை; அடிமைகளின் விலங்குகளைத் தகர்த்தெறியவில்லை; நல்லவர்களைத் தூக்கு மேடையிலிருந்து மீட்கவில்லை; எரியும் தீயை அணிக்கவில்லை. நாம் இயற்கையான ஒரு உலகத்தில் வாழ்கின்றோம் என்றும் கடவுள்களும் பேய்களும் தேவகுமாரர்களும் வெறும் கற்பனை யென்றும் நம்முடைய கடவுளும் மதமும் மற்றவர்களுடைய கடவுளையும் மதத்தையும் போன்றவைகளே என்றும் நம்முடைய தேவனும் தேவகுமாரனும்

பரிசுத்த ஆவியும் பலனளிப்பது பேலவே காட்டானர்களின் கல்லுச்சாமியும் பயனளிக்கிறதென்றும் அறிவாளிகள் எல்லாம் இப்பொழுது அறிந்து விட்டார்கள்.

V.

ஒழுக்கங்களுக்கும் இரண்டு வழி.

ஒழுக்கங்களைப்பற்றியும் இரண்டு கோட்பாடுகள் இருந்து வருகின்றன. ஒழுக்கமுடைய மக்கள் கடவுள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள் என்றும் அந்தக் கட்டளை சரியான தப்பா என்று அவர்கள் ஆராயமாட்டார்கள் என்றும் ஒரு சாரார் கூறுகிறார்கள். நன்மைக்கும் அறிவுக்கும் கடவுளே உற்பத்தி ஸ்தானம் என்று அவர்கள் நம்புகிறார்கள். கடவுள் செய்யாதே என்று விலக்குகிறவைகள் எல்லாம் பாவகரமானது என்று அவர்கள் நம்புகிறார்கள். பாவகரமானவைகளாயிருப்பதினால் அவைகளைக் கடவுள் தடுக்கிறார் என்று அவர்கள் நம்புவதில்லை. இந்தக்கூட்டத்தாருக்கு ஆராய்ச்சி முக்கியமல்ல; கீழ்ப்படிதலே முக்கியம். பகுத்தறிவை அவர்கள் மதிப்பதில்லை; கடவுள் தண்டனைக்குப் பயந்தும் நற்கருமங்களுக்குக் கடவுள் பரிசளிப்பார் என்று நம்பியுமே அவர்கள் செயலாற்றுகிறார்கள். கடவுள் ஒரு அரசர்; அவர் இட்டதே சட்டம்; மக்கள் எல்லாம் கடவுளின் அடிமைகள் என்பனவே அவர்களது சித்தாந்தம்.

கடவுள் நம்பிக்கையின்றேல் ஒழுக்கமில்லையென்றும் நற்குணங்கள் எல்லாம் அழிந்து விடுமென்றும் பலர் வாதிக்கிறார்கள்.

கடவுள் வாக்கியங்கள் பகுத்தறிவுக்கு அதீதமானவை யென்பது அவர்களது நம்பிக்கை.

ஒவ்வொரு செயலிலும் பொருளிலும் நன்மையும் தீமையும் இயல்பாகவே அமைந்திருக்கிறதென்றும் சில செயல்கள் மக்கள் நலத்தை விருத்தி செய்கின்றனவென்றும் சில செயல்கள் மக்களுக்குத் துன்பத்தையும் துக்கத்தையும் உண்டுபண்ணுகின்றவென்றும் நலத்தை உண்டுபண்ணுபவைகள் எல்லாம் நல்லொழுக்கத்தைச் சார்ந்தவையென்றும் மற்ற செயல்கள் எல்லாம் தீமையானவை என்றும் மற்றொருசாரார் கூறுகிறார்கள். நன்மை தீமைகளைக் கடவுள்

உபதேசிக்கவில்லையென்றும் மனிதன் தன் சொந்த அறிவினாலும் அனுபவத்தினாலும்உணர்ந்துகொண்டான் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஒழுக்க விஷயத்தில் தெய்வீகமாகவோ அற்புதமாகவோ எதுவுமில்லையென்று அவர்கள் சொல்கிறார்கள். ஒழுக்கத்துக்கு சுவர்க்கத்தோடோ கடவுளோடோ எத்தகைய சம்மந்தமும் இல்லையென்றும் அவர்கள் சாதிக்கிறார்கள். ஒழுக்கம் நமது மண்ணுலக நடக்கையைச் சார்ந்ததென்றும் நமது நடக்கையினால் நமக்கும் பிறருக்கும் ஏற்படும் பலன்களினாலே அந்நடக்கை நன்மையானதா தீமையானதா என்பது நிச்சயம் செய்யப்படுகிறதென்றும் அவர்கள் வாதிக்கிறார்கள்.

இவ்வுலகத்திலே மக்கள் எல்லாம் தமது தேவைகளை உழைப்பினால் பூர்த்தி செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். கைத்தொழில் மக்களுக்கு இன்றியமையாதது. எனவே உழைப்பவர்கள் எல்லாம் திருடுகிறவர்களுக்கு இயல்பாகவே சத்துருக்கள். திருட்டை எல்லாரும் வெறுப்பதற்கு கடவுள் கட்டளை காரணமல்ல; கடவுள் கட்டளை தேவையுமில்லை. துன்புறுத்தப்படுவதையும் அங்கப்பழுது செய்யப்படுவதையும் கொலை செய்யப்படுவதையும் மக்கள் எல்லாம் இயல்பாகவே வெறுக்கிறார்கள். எனவே எல்லா நாட்டிலும் எல்லாக் காலத்தும் தம்மைத்தாமே காத்துக்கொள்ளவே மக்கள் முயற்சி செய்து வந்திருக்கிறார்கள்.

தற்காப்புணர்ச்சி மக்கள் மனத்தில் தோன்ற கடவுள் கட்டளை தேவைப்படவில்லை. பசியெடுக்கும்போது உண்பது போலவே ஆபத்துக்காலத்துத்தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்வதும் மக்களுக்கு இயல்பாகவே அமைந்த குணம். ஒரு செயல் கடவுள் கட்டளைக்கு அனுகுணமானது அல்லது முரணானது என்று கூறி நற்செயல் என்றோ தீச்செயல் என்றோ முடிவு கட்டுவது மூடபக்தியைச் சார்ந்ததாகும். பலனால் செயல்களை நன்மையானதென்றோ தீமையான தென்றோ நிர்ணயம் செய்வதே விஞ்ஞான சாஸ்திரத்துக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்தமானது.

தெய்வ நம்பிக்கையுடையவர்கள் இயற்கைப் பலன்களை லக்ஷியம் செய்வதே இல்லை. கடவுள் கட்டளைக்கு முரணானவைகள் எல்லாம் தீமையானவை; பொருந்துவன வெல்லாம் நன்மையானவையென்பதே அவர்களது நம்பிக்கை.

கத்தோலிக்கர் கொள்கைப்படி வெள்ளிக்கிழமை மாமிச முண்பது பாவம்; அதற்கு நித்திய நரகதண்டனை. ஆனால் இயற்கைப்படி பார்த்தால் வெள்ளிக்கிழமை மாமிசமுண்பதி னால் மற்ற நாட்களில் மாமிசமுண்ணும் பலனே ஏற்படுகி றது. எனவே பாதிரிமார் எல்லாம் செயல்களின் பலன்களை ஆதாரமாகக்கொண்டு நன்மை தீமைகளை நிர்ணயம் செய் வதில்லை கடவுள் கட்டளையை ஆதாரமாகக்கொண்டே நன்மை தீமைகளை நிர்ணயம் செய்கிறார்கள். நிச்சயமாக வே இது ஆபாசமானது; மடமையானது. நித்தியனான ஒருவன் இருந்தால், இயல்பாகவே நன்மையான ஒன்றை தீயதாக்க முடியவே முடியாது. அதுபோல இயல்பாகவே தீய பலன் தரக்கூடிய ஒன்றை அவனுக்கு நல்லதாக்கவும் முடியாது. எல்லையற்ற கடவுளுக்கும் உண்மையான ஒன் றை மாற்ற முடியாது. கடவுள் இருந்தாலும் சரி, இல்லாவிட் டாலும் சரி, ஒரு வட்டத்தின் குறுக்களவுக்கும் சுற்றளவுக் கும் உள்ள சம்மந்தம் இயல்பாக அமைந்தபடியே இருந்து கொண்டிருக்கும்.

ஜடவுலகத்திலும் மனவுலகத்திலும் ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் உள்ள சம்பந்தமும் ஒரு சக்திக்கும் மற்றொரு சக்திக்குமுள்ள சம்பந்தமும் ஒரு செயலுக்கும் மற்றொரு செயலுக்குமுள்ள சம்பந்தமும் காரணத்துக்கும் காரியத்துக்குமுள்ள சம்பந்தமும் ஒரு வட்டத்தின் குறுக்களவுக்கும் சுற்றளவுக்கும் உள்ள சம்பந்தம் எவ்வண் ணம் மாறாமல் எப்பொழுதும் ஒரு படித்தாய் இருக்கின்ற தோ அப்படியே மாறாமல் எப்பொழுதும் ஒரு படித்தாய் இருந்து கொண்டே இருக்கும். முக்கோணத்தைச் சதுரமாக எப்படி மாற்ற முடியாதோ அப்படியே நன்றி மறத்தலை நற்குணமாக சர்வ சக்தியுடைய கடவுளுக்குங்கூட மாற்ற முடியாது.

எனவே ஒரு செயல் நன்மையானது அல்லது தீமையா னது என்பதற்குள்ள காரணம் இயல்பாக அச்செயலிலேயே அடங்கியிருக்கிறது. சர்வ வல்லமையுடைய கடவுளுக்கும் அதை மாறற முடியாது.

இவ்வுலகத்தில் தற்செயல், அதிர்ஷ்டம், மந்திரம், அற் புதம் என்பன இல்லவே இல்லை. ஒவ்வொரு சம்பவத்துக் கும் சிந்தனைக்கும் கதைக்கும் இயல்பான காரணம் ஒன்

இந்திய ஸ்திரீகள்.

I.

இந்தியாவிலுள்ள, ஓர் குடும்பத்தில் பையன் ஒருவன் பிறந்த அன்று அக்குடும்பத்தார் மிகுந்த சந்தோஷமடைந்து கொண்டிருப்பார்கள். ஆனால், ஓர் பெண் பிறந்து விட்டாலோ அங்கு சந்தோஷமே யிராது. பையன் பிறந்து விட்டால் ஆயிரக்கணக்காக பணங்களை செலவழித்து சந்தோஷங் கொண்டாடுவதும், பெண் குழந்தை பிறந்தால், மிகுந்த விசனப்படுவதும் வழக்கமாயிருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்பதை நாம் விபக்தமாக இங்கு கூறவேண்டியதில்லை. பையனானால், அக்குடும்பத்திலேயே அவனிருந்து சகல காரியங்களும் செய்கிறான். பெண்ணோ, எப்போதாயினும் சரி, பிறருடைய உரிமைக்கு ஆளாகிவிடுகின்றாள். இதை ஓர் காரணமாகக் கொண்டு, மனுஷ ஜன்மமெடுத்த இவர்களுக்குள் வித்தியாசம் காண்பிப்பது சரியன்று என்பதே நமது விவாதமாகும். பெண் குழந்தைகளை வளர்ப்பதிலும், ஆண் குழந்தைகளை வளர்ப்பதிலும் பெற்றோர்கள் அதிக வித்தியாசம் காட்டுவதையும் நாம்

துண்டு. ஒழுக்கத்துக்கு கடவுள் சித்தமே காரணமென்ற நம்பிக்கையினாலேயே உலகத்திலே கொடுமைகளும் துன்பங்களும் நிறைந்திருக்கின்றன. அந்த நம்பிக்கையினால் பகுத்தறிவு ஒளி மழுங்கி உலக உலக முன்னேற்றத்திற்கும் தடை ஏற்பட்டுவிட்டது.

சர்வ வல்லமையுடைய கடவுள் ஒருவர் இருந்தால் அவரது இன்பத்தை மனிதனால் துளியாவது குறைக்க முடியாதென்று அறிவாளிகள் இப்பொழுது ஊகித்திருக்கிறார்கள். ஒரு மனிதன் வேறொரு மனிதனுக்கே துன்பம் செய்ய முடியுமென்றும் எல்லையற்ற கடவுளுக்கு எல்லைக்குட்பட்ட மனிதனால் எத்தகைய துன்பமும் செய்ய முடியாதென்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

——)●(——

காண்கிறோம். ஆண் பிள்ளைக்கு விசேஷ உரிமையும், மற்றுஞ் சவுகரியங்களும், சுயேச்சையான இடமும் அளிக்கப்படுகின்றது. பெண் குழந்தைக்கோ இவ்விஷயங்களிலெல்லாம் குறைவுதான். அதற்கு சுயேச்சையே கிடையாது. எப்போதும் ஒருவரின் கீழ் அடங்கியே நடக்க வேண்டியதுதான். 'கடவுள்' பெண்களை சிருஷ்டித்ததின் நோக்கமென்ன? அவர்கள் ஓர் தேசத்திற்கு எங்ஙனம் பயன் படுகிறார்களென்பதை ஆழ்ந்து யோசிப்பவர்கள் இங்ஙனம் விதியாசம் பாராட்டவே மாட்டார்களென உறுதியாய்க் கூறலாம். ஆண்களுக்கொரு சட்டமும் பெண்களுக்கென்று ஒரு சட்டமும் இருக்கும்வரை இத்தேசம் முன்னேற்றமடையுமாவென்பதே நமது சந்தேகம்.

ஓர் பெண்ணின் தினசரி ஜீவியமானது மிகவும் பரிதாபகரமாயிருக்கிறதெனக் கூறலாம். பெரும்பான்மையான குடும்பத்தினர், பெண்களைத் தங்கள் சொத்தெனக் கருதாமல், எதோ சில வயது மட்டும் வளர்க்கும் பாத்தியம் பெற்றவர்களெனக் கருதுகின்றனர். ஆண்களுக்குள்ள அறிவு, சுயேச்சை, மற்றும் பலவித சாதனங்கள் பெண்களுக்கும் அமைந்திருக்கின்றன, மற்றும் இன்பமும், துன்பமும், இலாபமும், நஷ்டமும் யாவும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் யாதொரு விதியாசமின்றியே அமைந்திருக்கின்றன. ஆண்களுக்கு மட்டும் சுயேச்சையான சகல உரிமைகளையும் அளித்துவிட்டு, பெண்களைத் தாழ்த்தி வைத்திருக்கும் பாவத்தினின்று நாம் என்றுற் விடுதலை யடையவே முடியாது.

இந்து மத விசேஷங்களிலும், அம்மதத்தைப் பொறுத்த பல சம்பிரதாயங்களிலுஞ் பெண்கள் அதிகமாகப்பிரவேசிக்காதபடி தடை செய்யப்பட்டிருக்கின்றனர்.

1. ஓர் பையனுடைய பிறந்த தினத்திலோ, அல்லது அவனுக்கென்று ஓர் பெண் குறிக்கப்பட்ட தினத்திலோ (நிச்சயார்த்தம்) அந்த வீட்டில் மிகுந்த ஆடம்பரமாயிருக்கும். ஆனால், பெண்ணுக்கென்று ஆடம்பரங்கள் செய்யப்படுவதேயில்லை.

2. நமது நாட்டில் புதிய மணமக்களை ஆசீர்வதிக்கும் போது "கடவுள் உங்களுக்கு புத்திரனைக் கொடுத்து ஆசீர்வதிப்பாராக" எனக் கூறுகிறார்களே யன்றி, "பெண் குழந்தை" என்னும் பேச்சு வரவே வராது.

3. இந்த சாஸ்திரங்களையும், இந்து மத சரித்திரங்களையும் பார்ப்போமாயின், புத்திர பாக்கியமில்லாதவர்கள், புத்திரன் வேண்டுமென்றே தவம், தானம் முதலியன செய்ததாக வாசிக்கிறோம். புத்திரி கிடைக்க வேண்டுமென எவரும் பிரார்த்தனை செய்ததாகக் கூறப்படவில்லை.

4. இந்தியா தேசத்தின் சரித்திராசிரியர்களும், வித்வான்களும் மற்றும் கல்வியாளர்களும் சரித்திரங்கள், பாட்டுக்கள் முதலியன எழுதும்போது ஆண் மக்களைப் பெருமைப் படுத்தியும், பெண் மக்களைத் தாழ்த்தியும் கூறியிருக்கின்றனர். மனைவியாகப்பட்டவள், புருஷன் விஷயத்தில் இன்னின்ன கடமைகளில் தவறாது நடந்து கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறதே தவிர, ஓர் புருஷன் தன் மனைவியின் இடத்தில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி வியக்தமாகக் கூறப்படவில்லை. இங்ஙனம் ஒவ்வொன்றிலும் மிகப் பெரிய வித்தியாசம் காட்டப்படும்போது ஓர் சமூகமோ அன்றி தேசமோ எப்படி விருத்தியடையும்? நம் குடும்பங்களுக்குத் தக்க ஆதாரமும், போன்பும் செலுத்தி வருகின்ற தாய்மார்களுக்கும், மனைவிகளுக்கும் தக்க உரிமையும், சுதந்திரமும் அளிக்காவிட்டால் அவர்கள் எப்போதுதான் சுயேச்சையை அநுபவிக்க முடியும்? இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் நமது கவனத்தைச் செலுத்தி, செய்ய வேண்டியதைச் செய்யாமல், "யாவும் ஈசன் செயல்" என வேதாந்தம் பேசுவது நமது மௌடீகத் தனத்தை அதிகப் படுத்திக்கொண்டேயிருக்குமென நாம் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

5. விவாக விஷயத்தில் பெண்களுக்குச் சிறிதேனும் உரிமை அளிக்க நமது நாட்டார் இணங்காமலிருப்பது விசனகரமான விஷயமாகும். ஏதோ ஓர் பொருளை விலைக்கென்று பெறுவது போல் மாப்பிள்ளை வீட்டுக்காரர், பெண் வீட்டாரிடம், பெண்ணை விலைக்கு வாங்குகிறார்களென்றே கூறலாம்.

6. இந்துமத தர்மமானது மிகவும் பெருமையானது என்று சொல்லப்படுவதோடு அம்மதத்தின் தத்துவமானது விசால நோக்குடனும் சமதிருஷ்டியுடனும் சகல ஜீவ கோடிகளையும் ஒன்றாய் பார்க்கின்றதென்பதாகவும் சொல்லப்படுகிறதை ஒவ்வொருவரும் ஞாபகத்திற் கொள்ளவேண்டும். இப்பேர்ப்பட்ட தத்துவமிருந்தும் அம்மதத்தைச்சார்ந்த மனுஷரில் ஆண்களை உயர்வென்றும், பெண்களைத் தாழ்வென்றும்,

கருதி வருவதற்கு இந்து மதத்தைச் சேர்ந்த எவரும் சரியான சமாதானம் சொல்வதில்லை.

7. பெண்களின் முன்னேற்றத்துக்கென யாவரும்உழைக்கவேண்டும். அவர்களுக்குச் சமத்துவத்தை அளித்து சுயேச்சை வழியில் அவர்களை நடத்திச் செல்லுதல் நன்று என எவராவது ஒருவர் இரக்கப்பட்டு வேலை செய்ய ஆரம்பிப்பாராயின் பெரும்பான்மையான ஜனங்கள் இவரை வெறுப்பான நோக்குடனேயே கவனிப்பார்கள். இங்ஙனம் செய்யக்கூடாது. பெண்களுக்குச் சமத்துவம் அளிப்பது பாவகரமான விஷயமாகும் என எவராவது பேசினால், அவருக்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு கிடைத்து விடுகின்றது. இப்படி ஆதரவு கொடுக்கும் பெரும்பான்மையோர் பெண்கள் விஷயத்தில் இரக்கமுள்ளவர்களல்ல என்று கூற முடியாது. ஆனால் பெண்களின் முன்னேற்றத்தை இவர்கள் விரும்புகின்றவர்களல்ல என்பது உறுதி. இவர்கள் தங்கள் வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களுக்கு சுயேச்சையை அளிப்பார்கள். ஆனால் பெண்களுக்கோ சுயேச்சையை அளிக்க முன்வரமாட்டார்கள்.

8. சிசுவை அழித்தலானது சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருக்கின்றது. அஃது ஓர் பாதகச் செயலானபடியால் இவ்விதச் சட்டமிருக்கவேண்டியதும் நியாயமேயாகும். ஆனால் சட்டமிருப்பதினாலேயே இக்கொடுமை முற்றிலும் ஒழிந்து போயிருக்கின்றதா வென்பதை அறிஞர்கள் கவனிக்கும்படி கோருகிறோம். எத்தனையோ இடங்களில் இரகசியமாகவேனும், இச்செயல் நடவாமல் இருக்கின்றதா? பெண்கள் சமூகத்திற்கு சிறிதேனும் சுயேச்சை கொடுக்கப்படுமாயின் இவைகளெல்லாம் நிகழாதென்று உறுதியாய்க் கூறலாம்.

9. அநேக குடும்பங்களில் புருஷர்கள் தங்கள் மனைவிமார்களை தங்கள் காலின் செருப்புகளென எண்ணி, அவ்வளவு தூரம் அடிமைகளைப்ப நடத்தி வருகின்றனர். இதை கொடூரமான முறையென்று கூறாது வேறென்ன பெயரிட்டழைப்பது?

10. நமது தேசத்தில் ஓர் குடும்பத்தில் பையனொருவன் நோய் வாய்ப்பட்டால் வைத்தியர்களுடைய உதவி பெரிதும் தேடப்படும். கோயில்களில் அர்ச்சனை நடைபெறும். அவன் சுகமடையும் பொருட்டு தர்மங்களும் செய்யப்படும். ஆனால் பெண் வியாதியாக இருந்தாலோ, இவ்வளவு சிரத்தை கொள்ளுவதில்லை. இதை சமதிருஷ்டி என்று கூறலாமா?

11. ஏதாவது சில வேளைகளில் குடும்பங்களுக்குள் மனஸ்தாபம் நேர்ந்து விட்டால் அக்குடும்பங்களிலுள்ள ஆண்களைப்பற்றி எதுவும் பேசாமல் பெண்கள் விஷயத்தைப் பற்றி எடுப்பாகவும், முறையற்ற விதமாகவும் பேசுவதுவழக்கம்.

12. போஜன விஷயத்திலும் கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் காட்டப்படுகின்றது. பெண்ணானவள், ஆண் மகனைப்பார்க்கிலும் அதிக உழைப்பும், முயற்சியுமுள்ளவளாயிருந்தாலும் கூட, அவள் தன்றாகப் போஷிக்கப்படுவதில்லை. இதுவும் நமது தேசத்தின் தூர்ப்பாக்கியங்களிலொன்று எனக் கூறலாம்.

நாம் மேலே காட்டியுள்ள காரணங்கள் யாவும் அநுபவத்தை ஒட்டிச் சொன்னவைகளாகும். இம்மாதிரி பெண்களைச் சகல விஷயத்திலும் தாழ்த்தி வைத்திருப்பதன் காரணத்தாலேயே அவர்கள் பலவாறு இம்சிக்கப்படுகின்றனர். நன்றாக ஆழ்ந்து நோக்குவோமாயின், இந்திய பெண்கள் கொடூரமான நிலைமையிலிருக்கின்றார்களென்பதே உண்மை.

சில மேலான நல்ல குடும்பங்களில் பெண்களுக்கு சுயேச்சை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய குடும்பங்களில் உள்ள சந்தோஷத்தையும், நல்வாழ்வையும் நாம் இந்த வியாசத்தில் கூறிவிட முடியாது. இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் இனியேனும் நமது பெண்களின் நிலைமையைப்பற்றி நன்றாய் யோசிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தியாவில் சமூக முன்னேற்றம் அவசியமானால் அதில் பிரதானமாகக் கவனிக்க வேண்டியது பெண்களின் சமூக முன்னேற்றமேயாம். பெண்களைத் தாழ்ந்த நிலைமையில் நாம் வைத்திருக்குமட்டும், ஆண்கள் முன்னேற்றமடைந்துள்ளவர்களெனக் கூறுதல், ஊற்றுக்கு நில்லாத விவாதம்தான்.

ஆகையால் பாரத கண்டத்தின் முன்னேற்றத்தை விரும்புபெரியோர் இது விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

II

சில தேசங்களில், கலியாணம்செய்யப்பட்ட புதிய தம்பதிகளிருவரும், அவரவர் பெற்றோர் வீட்டைவிட்டு நீங்கி, தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். ஆனால் இந்தி

யாதிலோ அப்படியில்லை. பெண்ணானவள் தன்பெற்றோரை விட்டு நீங்கி, பெற்றோருடன் ஒன்றித்திருந்து காரியங்களை நடத்தும் புருஷனோடு வசிக்கவேண்டியவளாயிருக்கின்றாள்.

இந்தியாவில், பொதுவாக பெற்றோர்கள் எப்போதும் தங்கள் புத்திரர்களின் விவாக விஷயத்திலேயே அதிக உற்சாகங் காட்டுகின்றனர். புத்திரிகளின் விவாகத்தையோ ஏதோ ஓர் பாரம்போல் எண்ணி அசட்டையாக நடத்திவிடுகின்றார்கள்.

"பையனுக்குக் கலியாணம் செய்யவேண்டும். அவன் சந்ததியைக் காணவேண்டு"மென பெற்றோர் கூறுகிறாரேயன்றி, புத்திரிகள் விஷயமாக இவ்வளவுவாஞ்சையாகவார்த்தைகளைக் கூறுவதில்லை. பெற்றோர் தமது புதல்வனுக்குக் கலியாணஞ் செய்ய வேண்டுமெனப்பிரயாசை எடுக்கும்போது, பெண்ணின் மூலமாக எவ்வளவு சொத்து கிடைக்குமென்பதை முதலாவதாகக் கவனிக்கின்றார்கள். இன்னும் பல பெற்றோர்கள், சரியான நகையுடனும், சீதனத்துடனும் தங்கள் மகனுக்கு பெண்கிடைக்குமென்ற உறுதியேற்பட்டதும், தங்கள் கையில் பணமில்லாவிட்டால், எங்கேயாயினும் கடன்வாங்கி டம்பமாக கலியாணத்தில் செலவழித்து விடுகின்றனர். விவாக தினம் வந்ததும் அங்கு வைதீக சம்பிரதாயமாக, அதாவது தெய்வ ஆசீர்வாதத்துக்காக நடைபெறும் சடங்குகள் பல. நாம் அதைப் பற்றி இவ்வமயம் ஆக்ஷேபித்துக்கூற இங்கு வரவில்லை. ஆனால், சொத்து ஒன்றைமட்டும் குறியாகக்கொண்டு செய்யப்படும் காரியங்களை மட்டுமே ஆக்ஷேபிக்கிறோம். மணப்பந்தலில், பலர் முன்பாக, பெண்ணிற்கு பரியம் மாப்பிள்ளை வீட்டுக்காரர் கொடுக்கின்றனர். அநேகமாக நகைகளாகக் கொடுக்கப்படுவதே வழக்கம். இந்த தங்க வெள்ளி நகைகளைப் பலர் இரவல் வாங்கி, அந்தச்சமயத்தில் பெண்வீட்டாரை ஏய்த்து விடும்பொருட்டுக் கொடுத்துவிடுகின்றனர். மணமகளும் உச்சி குளிர்ந்து விடுகின்றாள். கலியாண வைபவம் முடிந்து பெண் தன் மாமனார் வீட்டுக்குப் போகிறாள். இரவல் கொடுத்த நகைக்காரர்கள் ஒவ்வொருவராக வந்து நகைகளை வாங்கிக்கொள்ளுகின்றனர். பெண்ணின் மனம் என்னவிதமாயிருக்குமென்பதை இங்கு விரித்துரைக்க வேண்டியதில்லை. தன்னை நகைகள் மூலமாக ஏய்த்துவிட்டார்களென்பது அவள் மனதில் படுகிறது. அவள் விசனத்திற்கு இதுவே அஸ்திவாரமாகின்றது. இத்துடன், சிலசமயங்களில் பெண்ணானவள், தன் பெற்றோர் வீட்டிலிருந்து அணிந்துவந்த நகைகளையும் மாமனார் வீட்டில் இழக்கவேண்டியும் நேரிடுகிறது.

இந்த விதமாக நல்ல பட்டபகலில், "மரியாதை" என்னும் பெயருடன், கொள்ளையடிக்கப்படுகின்றதென்றே கூறவேண்டும். அந்த ஏழைப்பெண் என்னசெய்யக்கூடும்? தனக்கு நேர்ந்துள்ள கஷ்டத்தையும், அதனால் ஏற்பட்டுள்ள துக்கத்தையும் வெளியே கூறமாட்டாதவளாக மனதில் அடக்கிக்கொள்ளுகிறாள். மதத்தின் பெயரால் ஏதோ சில சடங்குகள் விவாகதினத்தில் செய்யப்படுகின்றதேயன்றி, மற்றவை அனைத்தும் பித்தலாட்டமென்பது அவள் மனதில் புலனாகிறது.

மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்ததைக் கண்டு பரிதாபப்பட்டு யாராவது, அப்பெண்ணின் புருடனைக்கண்டு "என்ன ஐயா இப்படிச் செய்யலாமா? உங்கள் இரவல் நகை போனாலும் போகட்டும். அப்பெண் கொண்டுவந்ததையும் தொலைத்துவிட்டீர்களே?" எனக்கேட்டால், "குடும்பமென்றால் பலவிதமும் இருக்கும்" என வெகுசாதுவாய் பதில் சொல்லிவிடுவதுண்டு. விவாகம் செய்யப்படும்போது தெய்வ சந்நிதானத்தில் இருப்பதாகவே இந்து மதத்தின் கொள்கை. அங்கேயே, இவ்விதபித்தலாட்டங்களும் பெருமோசங்களும் துணிச்சலுடன் செய்யப்படுவதை தேசத்தார் நன்கு கவனிக்கவேண்டுமென்பதே எமது விருப்பமாகும். குடும்ப ஜீவியமென்றால் பெண்ணை விலைக்கு வாங்கியதுபோல் இரவல் நகைகளைக்கொண்டு வாங்குவதும், பின்னால் அவளை பரிதாப நிலைமைக்கு விடுவதுமல்லவே.

இது அவ்வளவு கொடூரமெனக் கூறிவிட முடியாது. இப்பெண் தனது குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த கொஞ்ச காலைக்குள், வீட்டிலுள்ள மாமனார், மாமியார், நாத்திமார் யாவரும் இவள் பேரில் குற்றங் கண்டுபிடிக்க ஆரம்பித்து விடுகின்றனர். இவள் அந்த வீட்டிற்கு ஓர் அடிமை யொப்பபாவிக்கப்படுகின்றாள். எந்த விஷயத்திலும், இப்பெண்ணின் மீது குற்றங்கண்டு, சிறிய விஷயங்களைப் பெரிதாக்கி புருஷனுடன் சொல்லுவதும், அவனுக்கு அதிக கோபத்தையுண்டாக்குவதும் சகஜமாகி விடுகிறது. இதனால், புருஷன் மனைவியை இம்சிக்க ஆரம்பித்து விடுகிறான். பின் இதுவே அந்த வீட்டின் தினசரி நடவடிக்கையாக மாறி விடுகின்றது. அப்பெண் மிகுந்த நிர்ப்பந்தத்துக்குஆளாகிவிடுகிறாள். மிகுந்த துக்கம் அவளைப் புடைசூழ, அவளின் வாழ்க்கை இன்பமாக இருக்கவேண்டியிருப்பதற்குப் பதிலாய், துன்பமாக மாறி விடுகிறது. அப்பெண்ணும், அவள் புருடனும் தனிக்குடித்தனம் செய்வார்களானால் இவ்வளவு துன்பத்திற்கு அவள் ஆளாகும்படி நேரிடமாட்டாதென்பது உண்மை.

இக்குடும்பத்தில், பெண் ஒருத்தியை மட்டும் மற்றவர்கள் யாவரும் திட்டுவதும், உதைப்பதும், நிஷ்டூரமாகப் பேசுவதும் தொழிலாகப் போய்விடவே, இப்பெண், இக்கஷ்டங்களைத் தாங்கமாட்டாமல் அநேக தடவைகளில் பட்டினியாகக் கிடக்கின்றாள். அவளுடைய தேகவலிமை, துக்கத்தாலும், பட்டினியாலும் குன்றிவிட, அவள் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளும் பலவீனமாகவே இருப்பதை நாம் காண்கிறோம். இவள் தன் குறைகளைப் பிறரிடம் கூறி ஆற்றிக்கொள்ள எவரும் அந்த வீட்டில் இடங்கொடுப்பதில்லை. இவள் பட்டினியாயிருந்தாலும் சாப்பிடச் சொல்லி உபசரிப்பதும் அந்த வீட்டில் கிடையாது. ஓர் வேளை ஆகாரம் கொடுக்கப்பட்டாலும், அது எல்லோரும் சாப்பிட்ட பின் மீதியுள்ளதாகவேயிருக்கும். இம்மாதிரியான பல காரணங்களால், பெண்களின் உடல் வலிமை, மனோ வலிமை, அழகின் பயன் யாவும் குன்றி விடுகின்றன. இந்தியாவில் பெண்கள் பொதுவாகப் பலவீனர்களாயிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

இன்னும் அநேக குடும்பங்களில், புருஷன் தனக்கு வேண்டியதை விலை கொடுத்து கடையினின்று பெற்றுக் கொள்ளுகிறான். ஆனால், தன்னைப்போலவே, சரீரம் படைக்கப்பெற்றுள்ளவளும், தனது அன்புக்குப் பாத்திரப்பட்டவளுமாகிய மனைவியையோ மறந்து விடுகிறான். தான் மாத்திரம் நல்ல பதிஷ்ணவகைகளையும் தின்பண்டங்களையும் வாங்கிப்புசிக்க வேண்டுமென்றும், தன் மனைவியை இவ்விஷயத்தில் அலக்ஷியம் செய்துவிட வேண்டுமென்றும் எந்த சட்டத்திலாவது கூறியிருக்கின்றதா?

இந்து மதமானது அநேக தர்மசித்தாந்தங்களை தன்னுள் அடக்கப் பெற்றிருக்கின்றதென முன்னமே கூறியிருக்கிறேன். "உயிர்களைக் கொல்லக்கூடாது; எந்த ஜீவனுக்கும் இரங்க வேண்டும்; மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர் போல் நேசிக்கவேண்டும்" என இந்து மதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இதன்படியே கடக்க வேண்டுமெனப் பெரியோரும் கூறுகின்றனர். எனினும் அம்மதத்தைச் சார்ந்த பெண்மணிகளின் நிலைமை எவ்வாறிருக்கின்றது என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டாமாவென்று கேட்கிறோம். பெண்கள் வாழ்வின் நிலைமை முற்றிலும் மாறுதலடைந்து சுபீக்ஷதசையடைந்தாலன்றி இந்நாடு க்ஷேமமடையாதென்பது திண்ணம்.

குழந்தைகளின் க்ஷேமம் தாய்மார்களின் நல்வாழ்வை பொறுத்திருக்கிறது என்பதை யாவரும் அறிவார்களென எண்

ணுகிறேன். நான் மேலே கூறியபடி உள்ள நிலைமையில் ஓர் பெண் சுகமானதும், பலமானதுமான குழந்தையைப் பெற் றெடுக்கக் கூடுமாவென்பதை வாசகர்களே சிந்திக்கவேண்டும். அவள் சந்தோஷமாயும், பலமுள்ளவளாயும் இருந்தால் பிறக் கும் குழந்தையும் ஆரோக்கிய முள்ளதாயும், புஷ்டியுள்ளதாயும் இருக்கும். இந்தியாவில் பிறக்கும் பிள்ளைகள் பொதுவாக, காளடைவில் அற்ப ஆயுளுடன் மறைந்து போவதற்கு இதுவு மொரு காரணமாகும்.

ஓர் தேசத்தில், ஆண்களுக்கு மட்டும் சுதந்தரமும், பெண் களுக்கு அடிமை வாழ்வும் இருக்குமாயின், அந்த நாடு முன்னே ற்றமடைந்ததெனக் கூறமுடியாது. அதைப் பாதி சுதந்தர மெனப் பெயர் வைத்தும் அழைக்க முடியாது. மனிதனுக்கு தேச விஷயத்திலோ, குடும்ப விஷயத்திலோ, அரசியலிலோ, அல்லது மற்றும் எந்தத் துறையிலாகட்டும் எவ்வளவு சுதந்தர மிருக்கின்றதோ, அவ்வளவு பெண்களுக்கும் இருக்கவேண்டு மென்பதே எனது திடமான அபிப்பிராயம். என் அபிப்பிராயத் துடன், எனையோர் ஒன்றுபடவேண்டுமாயின், நான் கூறும் காரணங்களை மேற்போக்காகக் கவனியாமல், ஆழ்ந்தயோசிப் பார்களானால், நான் சொல்வது நியாயம் என்னும் முடிவுக்கே வருவார்கள்.

இன்னும் சிலர் சில காரணங்களைக் கூறலாம். அதாவது நான் கூறியுள்ளபடி பெண்களுக்குச் சுயேச்சை கொடுத்து விட் டால் அவர்களில் சிலர் கெட்டுப் போய் விடுமாட்டார்களா என்பது.

"தப்பிதம் செய்தல்" என்பதை இந்த இடத்தில் கொண்டு வரவேண்டிய அவசியமில்லையென்றே எண்ணுகிறேன். ஆண் களில் நல்லவர்களுந் கெட்டவர்களுமிருப்பது போலவேதான் பெண்களிலுமிருக்கிறார்கள். ஏதோ சில பெண்கள் வழி தவறிக் கெட்டுப்போகிறார்களென்பது உண்மையே. இங்ஙனம் இவர் கள் கெட்டுப்போனதற்கு முக்கிய காரணம் ஆண்களாகவேயி ருப்பார்கள். சமத்துவம் என்னும் அருமையான சாதனத்தைப் பெண்களுக்கு அளித்துப் பாருங்கள். அவர்கள் வெகு மேன் மையுடன் வாழ்ந்து வருவார்கள். வேறு சிலர், சில காரணங் களைக் கூறலாம். அவைகளில் பிரதானமானது, "நாம் நம் முன்னோர்கள் கொண்ட கொள்கைப்படி நடக்கவேண்டுமேயல் லாது. இன்றைக்கு புதிதாக எதையும் செய்யக்கூடாது" என் பதேயாகும். இப்போது நாமிருக்கும் காலத்திற்கும், நமது

பரிதாபத்துக்குரிய பார்வதி!

(தோழர் அ பொன்னம்பலனார்)

பரிதாபத்துக்குரிய பார்வதிக்கு இப்பொழுது வயது 12-கடக்கின்றது. தமிழ்படிப்பில் நன்றாகத் தேர்ச்சியுள்ளது. நல்ல அழகும் உயர்ந்த குணமுமுள்ள பெண் பார்வதி. பார்வதிக்குக் கடவுள் பக்தியும் சமயப்பற்றும் அதிகம். தேவார திருவாசகப் பாசுரங்களை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்பிப்பாள். கவின காகரீகங்கள் பார்வதிக்கு சிறிதும் பிடிக்காது. உலக நடப்பையும் சீர்திருத்த வேகத்தையும் அறியாள். ஒரு வைதீகக் குடும்பத்தில் பிறந்து பெற்றோர்களால் அன்பாக வளர்க்கப்பட்டாள். பார்வதியின் பெற்றோர்கள் பரம வைதீகர்கள். சைவசமய அனுஷ்டானங்களில் அதிகப் பற்று கலுடையவர்கள். எப்பொழுதும் சிவப்பழமாகவே திகழ் முன்னோர்கள் வாழ்ந்திருந்த காலத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு என்பதை ஒவ்வொருவரும் நாபகத்தில் கொள்ள வேண்டும். நமது முன்னோர்களின் வாழ்க்கையை, இம்மாதிரி விஷயத்திற்குத்தான் கொண்டு வந்திருக்கிறோமேயல்லாது, அவர்கள் செய்யாத பல காரியங்களை இப்போது நாம் செய்ய வில்லையா? ஆகையால் காலாநுபாடுகளை அநுசரித்து, உலகின் போக்கையும் கவனித்து நாம் செய்யவேண்டியவை எவைகளோ அவைகளைச் செய்தே தீரவேண்டும்.

பெண்மணிகள் இவ்விதம் நிர்ப்பந்திக்கப்படுவதை இந்த நாட்டில் கல்வியாளர்களும், தலைவர்களும், மதாபிமானப் 'பெரியோர்'களும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பெண்கள் விடுதலைக்கென்று உழைக்க இவர்கள் யாவரும் ஒருமனப்பட்டு முன்னணிக்கு வருவார்களானால், பெருத்த புண்ணியத்தை இவர்கள் அடையக்கூடும்.

பக்தராம்.

வார்கள். ஜீவகாருண்யத்திலும் அடியார்களுக்கு (சோம்பேறி களான சமய வேடம் தாங்கிய சாதுக்களுக்கு) உபசாரம் செய் வதிலும் உணவு படைப்பதிலும் அதிகம் மோகமுடையவர்கள்.

பார்வதியின் தந்தையார் தினசரி சிவபூஜை செய்யாமலும் ஆலயதரிசனம் செய்யாமலும் உணவு அருந்தார். சைவ சமய நூல்கள் ஆராய்ச்சி செய்தவர். பல பண்டிதர்கள் சாதுக்களின் நட்பைப் பெற்றவர். காங்கிரஸ், காந்தி, பைத்தியமுமுண்டு. தமிழ் நாட்டில் நடக்கும் காங்கிரஸ்—சைவ சமயக் கூட்டங்கட்கு தவறாமல் செல்வார். அவருக்குள்ள பெரும் சொத்துக்களை சைவசமய வளர்ச்சிக்காகவும் கடவுள் பக்தி காரணமாகவும் பிறருக்கு உதவி செய்யும் பரோபகாரத்துடனும் செலவு செய்து விட்டார். பார்வதியினிடத்தில் அவள் தாய் தந்தையர்களுக்கு அளவற்ற அன்புண்டு.

பார்வதி பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே அவள் படிப்பை நிறுத்தி 12-வது வயதில் மணம் செய்து வைக்க பெற்றோர்கள் முடிவு செய்து விட்டார்கள். பார்வதியின் பெற்றோர்கள் தங்கள் குடும்ப நடையுடை பாவ னைகட்கும் சைவ சமய கடவுள் பற்றுதலுக்கும் மற்ற ஒழுக் கங்கட்கும் சிறந்த ஓரு சிவநேசச் செல்வர் வீட்டிலுள்ள சுந் தரம் என்பவருக்கு மணை முடிக்க சுந்தரம் பெற்றோர்களுடன் கலந்து பேசி முடிவு செய்து கொண்டார்கள். இம்மணத்தில் மணமக்களுடைய விருப்பம் கேட்கப்படவில்லை. பார்வதி பருவமடையாத பாலகி குழந்தை. குடும்பப் பொறுப்பே இன் னதென்று அறியாத விளையாட்டுப் பெண். பார்வதிக்குப்பேசி முடிக்கப்பட்ட புருஷன் சுந்தரத்திற்கோ வயது 25 இருக்கும். சுந்தரம் பார்வதியை மணம் முடித்துக்கொள்ள விருப்பியதாக வும் தெரியவில்லை. எல்லாம் மணமக்களின் பெற்றோர்களே ஒருவாறு பேசிமுடித்துக்கொண்டு விட்டார்கள். அதன் பிறகு நல்ல சோதிடனைக்கொண்டு பார்வதிக்கும்—சுந்தரத்திற்கும் பொருத்தங்கள் பார்த்தார்கள். எல்லாப் பொருத்தங்களும் சரியாக அமைந்திருக்கின்றன என்றும் இத்தம்பதிகள் நீடுழி வாழ்ந்து சகல இன்பங்களையும் புத்திர சம்பத்துக்களையும் பெறுவார்கள் என்-றும் சோதிடம் பார்த்துச் சொல்லிவிட்டு அத் தம்பதனை புத்தகத்திலும் எழுதிக்கொடுத்துவிட்டு ரூபாய் ஐம்பது பெற்றுக்கொண்டுபோய் விட்டார் சோதிடர்.

பிறகு முகூர்த்த நாள் பார்த்து நல்ல சுபதினத்தில் சைவ சமய ஆகமப்படி ஒழுங்காக எல்லாக் கிரியைகளையும் நடத்தும்

புரோகிதரைக்கொண்டு பார்வதிக்கும்—சுந்திரத்துக்கும் வெகு விமரிசையாக வைதிகமுறைப்படி திருமணம்திருநெல்வேலி பாப நாசத்தில் நடைபெற்றது. மணம் முடிந்ததும மணமக்களும் பந்துமித்திரர்களும் தங்கள் சொந்த ஊராகிய அம்பாசமுத் திரம்போய்ச் சேர்ந்தார்கள்.

மணம் முடிந்து முதலாவதாண்டு முடிவில் பார்வதியின் புருஷன் சுந்திரம் நோய் வாய்ப்பட்டார். பல நாள் படுக்கை யில் கிடந்தார். தக்க வைத்தியர்களைக் கொண்டு வந்து பார்த்தார்கள். கோவில் கடவுளுக்கு பிரார்த்தனைகள் செய்து கொண்டார்கள். பல தெய்வங்கட்கு பணம் முடிந்து போட் டார்கள். நோய் வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கும் சுந்திரத் தைச் சுற்றி பல பந்துக்களும் பெண்களும் கண் கலங்கிக் கொண்டு நிற்கிறார்கள். பார்வதிக்கு ஒன்றும் புரியவில்லை. மற்றவர்களைப் பார்த்து பார்வதியும் தேம்பித்தேம்பி அழுக ஆரம்பித்தாள். இறுதியில் சுந்திரம் மரணமடைந்தார். எல் லாப் பெண்களும் பார்வதியைக் கட்டிக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுக ஆரம்பித்துவிட்டார்கள். பார்வதியின் பெற் றோர்கள் ஓவென்று அலறுகின்றார்கள். கீழே கிடந்து துடிக் கிறார்கள். அந்த சமயத்தில் "அட கடவுளே! பார்வதியின் தலை எழுத்து இவ்வளவுதானா?" என்பார்கள் சிலர். "விதி யை யார் வெல்லமுடியும்?" என்பார்கள்மற்றுஞ்சிலர். "குழந்தை பார்வதி உனதுவாழ்க்கை இப்படியா முடிந்தது?" என்பார்கள் வேறுசிலர். மற்றும் பலஆடவர்களும் ஓவென்று கத்தி அழுகின் றார்கள். சுவரில் தலையை மோதிக்கொள்ளுகிறார்கள். "ஐயோ தெய்வமே உனக்குக் கண்ணில்லையா? நாங்கள் ஒரு பிழையும் செய்யவில்லையே? எங்கள் குடும்பத்திற்கா இத்த கைய சோதனைகள்?" என்று புலம்பி அலறுகின்றார்கள்.

பல வயது சென்ற பெண்களும் ஆண்களும் கூடிக்கொண்டு புலம்பி அழுபவர்கட்கு ஆறுதல் கூறுகிறார்கள். "நாம் என்ன செய்யலாம்?" "எல்லாம் அவன் செயல் அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று சமாதானம் சொல்லுகின்றார்கள்.

இறந்துபோன சுந்திரத்திற்கு பலவித சடங்கு கள் செய்து பிரேதத்தை மாயானத்துக்கு எடுத்துப்போய் தீ மூட்டினார்கள். சுந்திரம் வெந்து சாம்பலானார். மறு நாள் பார்வதியைச் சுற்றிக்கொண்டு பலபெண்கள் மாரடித் துக்கொண்டு அழுதார்கள். பார்வதி பசியாலும் மயக்கத்தா லும் அழுவதற்கும் சக்தியற்றுப்போயிருந்தாள். அந்நிலைமை

யில் பல பெண்கள் கூடிக்கொண்டு பார்வதியின் தாலியை அறுத்தார்கள். பிறகு ஒவ்வொரு நகையாகப் பறித்தார்கள். இடுப்பிலிருந்த கலர் புடவையையும் அகற்றினார்கள். வெள்ளைப்புடவையைச் சுற்றினார்கள். பார்வதியின் அழகிய கூந்தலையும்கனைத்துமொட்டையடிக்கும்படி கட்டளையிட்டார்கள். பார்வதி இக்கொடுமைகளை எங்கும் பார்த்ததில்லை. தன்னை என் இப்படி அலங்கோலம் செய்கிறார்கள் என்பதும் அவளுக்கு நன்கு விளங்கவில்லை. பார்வதியைப்பார்த்து "இனி உனக்கு உன் வாழ்க்கையில் ஒன்றுமில்லை; எல்லாம் உன் புருஷனுடன் போய்விட்டது; இனி நீ நகைகள் போட்டுக்கொள்ளக் கூடாது; கலர்புடவை கட்டிக்கொள்ளக்கூடாது; பூ பொட்டு வைக்கக்கூடாது; தலையிர் வளர்த்து சடைபோடக் கூடாது; தலைக்கு எண்ணெய்க்கூடாது; பாயில்படுக்கக்கூடாது. நல்ல சாப்பாட்டை விரும்பக்கூடாது; ஆடவர்களுடைய முகத்தில் படக்கூடாது; வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது" என்றெல்லாம் பெண்களில் சிலர் உபதேசம் செய்தார்கள். பார்வதியும் இந்த உபதேசங்களை மெய்யாகவே நம்பினாள். புருஷனை இழந்த பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கருதிக்கொண்டாள். இந்த அலங்கோலங்கள் நடக்கும் பொழுது பார்வதிக்கு வயது 13க்கு மேலாகின்றது.

பார்வதியின் பெற்றோர்கள் பார்வதியை துர்ப்பாக்கிய சாலி என்று மதித்தார்கள். பார்வதியை நினைக்கும்பொழுதெல்லாம் தாயார் புலம்பி அழுவாள். பார்வதியும் தேம்பி அழுவாள். பார்வதி புருஷன் இறந்தபிறகு தினசரிசாப்பிடுவதில்லை. இரண்டுநாளைக்கு ஒரு முறை ஒரு வேளை சாப்பிடுவாள் மீதியுள்ள நேரங்களில் ஒப்பாரி சொல்லி புலம்புவது கட்டாயப்படுத்தப்பட்டாள்.

பார்வதியின் புருஷன் வீட்டில் மாமியார், மாமனார், நாத்திமார்கள் கொடுமை சகிக்க முடியவில்லை. பார்வதியின் மாமியார் பார்வதியைத் தினசரி எரிக்கொண்டேயிருப்பாள். "என் வீட்டுக்குள் காலடி வைத்த ஒரு வருடத்தில்என்மகனைச் சாப்பிட்டுவிட்டாயே! எனது அருமை மகனைக்கொல்ல எமனாக என் வீட்டுக்கு வந்தாயே!" என்பாள். வீட்டுவேலைகள் மாட்டு வேலைகள் செய்யும்படி கட்டாயப்படுத்துவாள். வேலைகள் செய்து கொண்டிருக்கும்போதே குறைகூறி "அறுகலி முண்டே..." என்று ஏசுவாள். இக் கஷ்டங்கள் சகியாமல் பார்வதி தாயார் வீட்டுக்கு இறுதியாக வந்துசேர்ந்தாள். இப்பொழுது புருஷன் வீட்டார் பார்வதிக்கு ஜீவனாம்சமாக வருடம் ரூபாய்

ஐம்பதும் இரண்டு வெள்ளைப்புடவைகளும் கொடுத்துவருகிறார்கள். புருஷன் சொத்துகளில் வேறு எவ்வித உரிமையும் கிடையாது.

பார்வதி தாயார் வீட்டுக்குப்போய் 14 ம் வயதில் பருவமானாள். பருவமடைந்து என்ன பயன்? முன்னிலும் அதிகக் காவல்கள் ஏற்பட்டன. தினசரி வீட்டுவேலைகள் மாட்டு வேலைகள், தோட்ட வேலைகள் யாவும் ஒழுங்காகச் செய்து முடிக்கவேண்டும். அதன்பிறகு சோறு சமைத்தல், பாவு ஆட்டுதல், சாணி தட்டுதல், வேட்டி சேலை சுத்தம் செய்தல் முதலியன பார்வதியின் நித்திய வேலைகளாகும். பார்வதி புருஷன் இறந்தபிறகு சிறையில் அடைபட்ட கைதிகளைப் போலவே நடத்தப்பட்டு வந்தாள்.

பார்வதியின் அண்ணன் பரமசிவம் ஒரு சீர்திருத்தக்காரர். பகுத்தறிவுவாதி. ஜாதி மத சமயப்புரட்டுகளை யொழிக்க வேண்டுமென்பதில் ஆர்வமுடையவர். பரமசிவத்தை எல்லோரும் சுயமரியாதைக்காரன் என்று அழைப்பார்கள். பரமசிவத்திற்கு தனது தாய் தந்தையர்களுடைய போக்கு பிடிக்காது; தாய் தந்தையார்களின் சைவ சமயத் திருநீறு வேடத்தை வெறுப்பார். தந்தையார் செய்யும் சிவபூஜையை வீண் வேடம் என்றும் கபட நாடகம் என்றும் பகட்டாகப் பேசுவார். இதன் காரணமாகவே பரமசிவம் பெற்றோர்கள் பரமசிவத்திடம் அன்பாயிருப்பதில்லை. பரமசிவத்திற்கு வீட்டில் சாப்பாடு கூட சமயமாக வழங்குவதில்லை. ஒரு தீண்டாதார் என்போரை நடத்துவதைவிட மிகவும் கேவலமாகவே நடத்துவார்கள். இது பிடிக்காமல் பரமசிவம் வீட்டை விட்டு மதராசுக்குப்போய் அங்கு ஒரு தொழிற்சாலையில் வேலைக்கு அமர்ந்தார். பரமசிவம் தன் சகோதரி பார்வதியின் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களைக் குறித்தும் பார்வதியின் எதிர்கால வாழ்க்கையைக் குறித்தும் அடிக்கடி சிந்திப்பார். தன் தாய் தந்தையார்களின் ஜீவகாருண்ய மற்ற போலிச்சைவ சமயக் கொள்கைகளைப் பற்றியும், ஜாதி, சமூகக்கட்டுப்பாடுகளைப் பற்றியும் எண்ணி வருந்துவார். தனது சகோதரி பார்வதியை விதவைக் கொடுமையிலிருந்து விரைவில் மீட்க வேண்டுமென்றும் யோசிப்பார். பார்வதியை ஏன் விதவாவிவாகம் செய்து கொள்ளும்படி யோசனை கூறக்கூடாது என்றெல்லாம் பலவாறாகச் சிந்திப்பார். பரமசிவத்திற்கு வந்து கொண்டிருந்த "பகுத்தறிவு" பத்திரிகையும் "மாதர் மறுமணம்" பத்திரிகையும்

ஒரு நாள் பார்வதிக்குக் கிடைத்தது. அதனை திருட்டுத்தன மாகப் பார்வதி படிக்க முயற்சித்தாள். படித்து முடிந்ததும் பார்வதியின் உள்ளத்தில் பலவித உணர்ச்சிகளும், புதிய சக்தி களும் பிறந்தன.

தனது பெற்றோர்கள் தனக்குச் செய்த பால்ய மணக் கொடுமையை எண்ணி வருந்தினாள். ஹிந்து விதவைகள் படும் துயரம் பார்வதி கண் முன் நின்றது. பருவமடையாத பெண்ணை பொருந்தா மணம் செய்வதும் புருஷன் இறந்த பின் அவளை விதவை என்று கொடுமைப் படுத்துவதும் தானா மனிதர்களின் ஜீவகாருண்யம்? எனது பெற்றோர்கள் செய்த தவறுதலுக்காக சமூகக்கட்டுப் பாட்டை மதித்து நான் கஷ்டப்பட வேண்டியது தானா? "கடவுள் செயல்" "தலை விதி" என்பதெல்லாம் அறியாமையே தவிர வேறில்லை. மனிதன் ஜீவகாருண்யம் பேசுகிறான்; சிவபூஜை செய்கிறான், அன்பு சமயம் சைவ சமயம் என்று உபதேசம் செய்கிறான். தேச மக்களின் சுதந்திரம், விடுதலைக்காகப் பாடு படு கிறார்கள் தேச பக்தர்கள்; எல்லாம் வேஷம் தான். தனது வீட்டிலுள்ள பருவமடைந்த பெண்ணை-உணர்ச்சியுள்ள பெண்ணை-விருப்பு வெறுப்புணர்வுள்ள பெண்ணை விதவை என்று கொடுமைப்படுத்தி அடக்கி ஒடுக்கி அடிமையிலும் கேவ லமாக நடத்துவது தானா ஜீவகாருண்யம்? மனிதர்களில் பெ ரும்பாலோர் வாய் வேதாந்தம் பேசுகின்றார்கள். செயலில் மிகவும் பிற்போக்காகவே நடந்துகொள்ளுகின்றார்கள். ஆம்! உண்மைதான்!! ஆடவர்களைக் குறைகூறி என் செய்வது? அவர்கள் ஆதிக்கவெறி பிடித்து பெண்களை அடக்கியாள விரும்புகின்றார்கள். பெண்கட்கு அறிவில்லையா? அறிவுண்டு. பகுத்தறிவுள்ள பெண்கள்—திடமுள்ள பெண்கள்—வீரமுள்ள பெண்கள்—விடுதலை சுதந்திரம் விரும்பும் பெண்கள் எவருக் கும் அடிமையாக இருக்கவேண்டுவதில்லை. விதவையாகவு மிருக்கவேண்டுவதில்லை என்பது மெய்தான்! முற்றிலும் மெய் தான்!! இனி நான் விரைவில் விடுதலை பெற முயல்கிறேன். எனது அண்ணாரின் கொள்கைகளைப்பற்றி பகுத்தறியாமல் தவறாக எண்ணியிருந்தேன். இது சமயம் எனது அண்ணார் இங்கிருப்பின் எனது மனமாற்றத்தை அவருக்குத் தெரிவித்து எதாகிலும் ஒரு வற்பாடு செய்யுமாறுவேண்டுவேன்; அவரையும் பெற்றோர்கள் வீட்டைவிட்டுப்போகும்படி செய்து விட்டார் களே என்று வருந்தினாள்.

இச்சமயத்தில் மதராசிலிருந்து பார்வதியின் அண்ணன் பரமசிவம், பார்வதிக்கு எழுதிய கடிதம் ஒன்றை ஒருபெண் ரகசியமாக பார்வதியிடம் கொண்டுவந்து கொடுத்து விட்டுப் பின்னர் வருவதாகச் சொல்லிப் போனாள். அக்கடிதம் வருமாறு:—

அன்புள்ள சகோதரி பார்வதிக்கு!

"நீ விதவை என்ற பெயரால் படும் கஷ்டத்தை என்னால் சகிக்க முடியவில்லை. நீ விரைவில் எப்படியாகிலும் நமது வீட்டை விட்டு வந்து விடு. உன்னிடம் அன்புள்ளவராகக் காட்டிக் கொள்ளும் நமது பெற்றோர்களும் உனது கஷ்டத்தை யுணரவில்லை. அவர்களால் உனக்கு விடுதலை கிடைக்காது. நீ இவ்விடம் வந்தபிறகு உனது மனதுக்கொத்த ஒரு வாலிபரை மணம் செய்துகொண்டு வாழலாம். வைதீகப் பித்தர்களும் சாதி வெறியர்களும் உன்னைத் தூற்றுவார்கள். நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே. நீ விதவாவிவாகம் செய்து கொண்டால் பல தோழர்கள் உங்கட்கு ஆதரவு கொடுப்பார்கள். பல சங்கங்கள் உங்கட்கு ஆதரவு கொடுக்கும். பயப்படாமல் தைரியமாகப் புறப்படு. உனக்கு வேண்டிய உதவிகளை உனக்குக் கடிதம் கொண்டுவந்த மதராஸ் விதவா விவாகசங்கக்காரியதரிசி செய்து கொடுப்பார்.

நான் வீட்டைவிட்டு மதராஸ் வந்தது முதல் ஒரு தொழிற் சாலையில் வேலை செய்து மகிழ்ச்சியோடும் மானத்தோடும் வாழ்கிறேன். விரைவில் உனது வருகையை எதிர்பார்க்கிறேன்"

இங்ஙனம், அன்புள்ள சகோதரன்,
பரமசிவம்.

இக்கடிதத்தைப் படித்தாள். இக்கடிதத்தைப் படிக்கும் சமயம் பார்வதியின் தகப்பனார் பார்த்து விட்டார். "அது என்ன கடிதம்" என்று கேட்டார். பார்வதி பயந்து கடிதத்தை மறைத்தாள். உடனே பலாத்காரமாகக் கடிதம் பிடுங்கப் பட்டது. தகப்பனார் கடிதத்தைப்படித்தார். பார்வதியைப் பார்த்து "நீயும் உன் அண்ணனோடு சேர்ந்து கழுதையாய் விட்டாயா?" என்று கோபாவேசமாகக் கேட்டார். "எப்படி இங்கு உனக்கு கடிதம் வந்தது" என்று மிரட்டினார். "குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பே" என்றார். "சாதி சமூகக்கட்டுப் பாட்டை மீறுவதற்கும் வீட்டை விட்டு வெளியில் புறப்படுவதற்குப் தைரியம் வந்து விட்டதா? எப்பொழுது புறப்படப் போகிறாய்?" என்று பகட்டமாகப் பேசிக்கொண்டிருந்தார். இச்

சமயம் பார்வதியின் தாயாரும் வந்து விட்டாள். விபரம் தெரிந்தவுடன் தாயாரும் ஆர்ப்பாட்டம் செய்தாள். பக்கத்து வீட்டு ஜனங்கள் அறியும்படி கூச்சல் போட்டாள். பார்வதியின் தாயார் பார்வதியைக் கோபமாகப் பேசி கையப் புடைத்தாள். பின்னர்பார்வதி காலில்களில் நெருப்பினால் சுட்டு "வெளியில் போகாதே! அழுகலி மூண்டைக்கு மறு கல்யாணமா? உனக்கு அண்ணன் விபார்சு செய்கிறானா? மதராஸுக்கு புறப்படுவதைப்பார்க்கிறன்" என்று சொல்லி, ஒரு வீட்டுக்குள் தள்ளி பூட்டிவைக்கப்பட்டாள் பரிதாபத்துக்குரிய பார்வதி. பார்வதி தனது தாய் தந்தையர்களால் என்றும் இவ்விதம் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டதில்லை. இழிவாகப் பேசப் பட்டதுமில்லை. தாய் தந்தையர்களிடம் பார்வதிக்கிருந்த அன்பின் காரணமாக ஒன்றும் எதிர்த்துப் பேசவில்லை. தாயார் அடித்த அடிகளையும் உதைகளையும் நெருப்பால் சுட்டதையும் தந்தையார் பேசிய கோபாவேச மொழிகளையும் நினைத்து நினைத்து கண்ணீர் வடித்து அழுதாள். நான் ஏன் உயிரோடு வாழவேண்டும்? எனக்கு இனியார் ஆதரவு? விதவையாக உலகில் வாழ்வதைவிட இறப்பது மேல் அல்லவா? பெற்றோர்களுடைய அன்பும் இவ்வளவுதானா? உலக மக்கள் என்றும் மூடநம்பிக்கைகளுக்கும் சாதி சமூகக்கட்டுப்பாட்டுக்கும் அடிமையாகயிருக்க வேண்டுமா? உணர்ச்சியுள்ள மனிதஜீவன்களுடைய உரிமையைத் தடைபுரியும் சிவ தேசச்செல்வகள் எந்த மோட்சம்பெறுவதற்காக இங்குபூஜைசெய்கிறார்கள்? சுந்திரமூர்த்தி நாயனார் சங்கிலியார் என்ற விதவையை மணந்துகொண்டதாகப் புராணம் படிக்கிறார்கள். இவர்கள் வீட்டிலுள்ள விதவைகளை வீட்டில் பூட்டி நெருப்பால் காலில் சூடுபோடுகின்றார்கள். என்ன கொடுமை! என்ன அநியாயம்!! விதவைகளைக் கொடுமைப்படுத்தும் இவர்கட்கு தண்டனை கிடையாதா? என்றெல்லாம் எண்ணிக்கலங்கினாள். இனி, தான் மதான்போகமுடியாதென்று திட்டமாகநம்பினாள். தன்னைப் பற்றி எங்கும் பழிப்பாகப்பேசப்படுமே என்று வருந்தினாள்.

நான் என்ன தவறு செய்தேன்? விதவைகட்கு மனித ஜீவ உணர்ச்சியில்லையா? இப்பொழுது விதவைகள் மறுமணம் செய்துகொண்டு வாழவில்லையா? என்னைமட்டும் என் என் பெற்றோர்களும் மற்ற உறவினர்களும் இழிவாகப்பேசவேண்டும்? என்று குற்றமில்லாத இளங்கொடி பார்வதி கலங்கினாள். இறுதியாகப் பார்வதி ஒரு முடிவுக்கு வந்தாள். இனி உலகில் இருப்பதா? இறப்பதா? இதுவே கேள்வி! நான் இப்பொழுது

சிறையில் அடைபட்டிருக்கிறேன். எனது பெற்றோர்களும் மற்ற உறவினர்களும் எனக்கு பகைவர்களாகிவிட்டார்கள். கொடுமைப்படுத்தவும் துணிந்துவிட்டார்கள். எனது அருமை அண்ணாரும் இங்கில்லை. கடிதம் கொண்டுவந்த அம்மையாரையும் இனி நான் பார்க்கமுடியாது. இனி நான் விதவையாக உயிர்வாழமாட்டேன். இது நிச்சயம் உறுதி. என்று கூறிக் கொண்டு தனது இடுப்பிலிருந்த வெள்ளைப் புடவையைக்கயிறாகக்கொண்டு கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு மாண்டாள். பரிதாபத்திற்குரிய பார்வதியின் பெற்றோர்கள் வீட்டிற்குள் நுழைந்துபார்த்தார்கள். தனது அருமை மகள் தூக்கிட்டுக் கொண்டு இறந்து கிடப்பதைக்கண்டார்கள். பக்கத்தில் ஒரு கடிதம் கிடந்தது. அக்கடிதத்தில்

"எனது அருமைத் தாய்தந்தையர்களே!

நான் உங்கட்கு எவ்விதக் கொடுமையும் செய்யவில்லை. நீங்கள் என்னால் அவமானமடைய வேண்டாம். நான் இனி எங்கும் ஓடப்போவதில்லை. இனி யாரையும் மறுமணம் செய்து கொள்ளப் போவதுமில்லை.

ஒரு பாலியப் பெண் விதவையாக இருந்து சமூகக் கட்டுப்பாட்டிற்கும் பொற்றோர்கள் உறவினர்களுடைய கொடுமைக்கும் ஆளாகுவதைவிட இறப்பது நல்லது என்ற முடிவுக்கு வந்தேன்.

நான் இறந்து போவதின் மூலம் யாருக்கும் நஷ்டமில்லை. ஹிந்து விதவைகள் படும் துயரம் உலகத்தாருக்கு நன்கு தெரியட்டும். என் மரணத்தால் கோடிக்கணக்கான விதவைகட்கு விடுதலை கிடைக்கட்டும். நீங்கள் சுகமாக இருங்கள். நான் உங்களைவிட்டுப் பிரிகிறேன்".

அன்புள்ள,
பார்வதி.

என்று எழுதப்பட்டிருந்தது. பார்வதியின் பெற்றோர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதார்கள். அவர்கள் அழுது என்ன பயன்? 16 வயதுள்ள பார்வதி கொடுமை சகிக்க மாட்டாமல் தற்கொலை செய்து கொண்டாள். பார்வதியின் உடல் தகனம் செய்யப்பட்டது. ஹிந்து சமூகத்திலுள்ள விதவைப் பெண்மணிகள் துயரம், அதிலும்

இஸ்லாமும் பெண்களும்.

(தோழர் நூர்ஜஹான்)

இஸ்லாம் மதத்தின்கோட்பாட்டிலும் பழக்க வழக்கத்திலும் பெண்கள் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை இக்கட்டுரையில் எடுத்து காட்டப்பிரியப்படுகின்றேன். இஸ்லாம் மதத்தில் பெண்களுக்கு பல சுதந்தரங்கள் அளிக்கப்பட்டிருப்பதாகவும், பலவகைகளிலும் அவர்கள் நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன என்றும் முஸ்லீம் பத்திரிகைகள் வானமளாவப் புகழ்கின்றன. இன்னும் சிலர் உலகத்திலே இஸ்லாம் மதம் ஒன்றே ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவத்தை அளிக்கிறது என்றும் வாய்ப்பறைசாற்றுகிறார்கள். அவ்வாறு கூறுவது முழுப் பொய்யான காரியமாகும். அவர்கள் ஆதாரமாக எடுத்துக்கொண்டு பேசும் கோட்பாடு குர்ஆன் ஒன்றேயாகும். ஆதலால் அதைக்குறித்து மட்டும் இன்று ஆராய்ந்து எழுதுகிறேன்.

ஒருவன் அநேக மனைவிகளையுடையவனாயிருத்தலையும், அடிமைத் தனத்தையும், வைப்பாட்டிகள் வைத்திருத்தலையும் குர்ஆன் அனுமதிக்கிறது. இதற்கு சமாதானமாக சில முஸ்லீம்கள் ஒருவன் பார பக்ஷமற்ற தன்மையிலும், சமமாகவும், நீதியாகவும் நடந்துகொள்ள முடியுமானால் 4 மனைவிகளை மணந்துகொள்ளலாம் என மகமது

இளம் விதவைகளின் கஷ்டங்கள் சகிக்கக் கூடியதாகயில்லை. சமூகக் கட்டுப்பாட்டை உடைத்து "தலை விதி" "கடவுள் செயல்" என்ற மூட எண்ணத்தை அகற்றினால் விதவைகட்கு இப்புவியில் விடுதலையுண்டு. பெண்கள் சமூகத்தில் கோடிக்கணக்கான மக்களை ,விதவைகளாக்கி வைத்துக் கொடுமைப்படுத்தும் வரை ஆண் மக்கள் அறிவுடையவர்களாகக் கருதப்படமாட்டார்கள். விதவைகளின் விடுதலைக்காகவே நாடு முற்றும் பல சங்கங்கள் தோன்றிப் பணியாற்றவேண்டுவது அவசியமாகும்.

——)●(——

அனுமதித்திருக்கிறார் என்று கூறுகிறார்கள். பால்டுவின், ஹோர், சைமன் முதலியவர்களுடைய அரசியல் தந்திரங்கள் எல்லாவற்றையும்விட இவரது தந்திரம் தலைசிறந்ததென்றே சொல்லவேண்டும். "ஒரு வேளை அவருக்கு நாக்கு கன்னத்திலிருக்கவேண்டும். அல்லது அவருக்கு ஆண்களிடத்தில் அபரிமிதமான ஆசையும் அபிமானமும் இருக்கவேண்டும்." என ஒரு ஆசிரியர் கூறியிருக்கிறார். அது சரியென்றே நாம் எண்ணவேண்டியிருக்கிறது.

அத்தகைய காரியத்தை மறைப்பதற்காக சிலர் அந்நாளில் அரேபியாவில் ஆண்களைவிட பெண்கள் மிதமிஞ்சியிருந்தார்கள். அதனால் தான் முகமது இவ்வாறு ஒருவன் 4 மனைவிகள் வரை மணந்து கொள்ளுவதற்கு அனுமதித்திருக்கிறார் என்று கூறுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால், உலக முழுவதற்கும் 'கடவுள்'ளால் அளிக்கப்பட்ட பொதுநீதி என்று குர்ஆன் கூறிக் கொள்வதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்தவர்கள்; என்று குர்ஆன் சொல்லுவதோடு நின்றுவிடாமல், பெண்களை சாதாரண தட்டுமுட்டு சாமான்களுக்கு சமானமானவர்கள் என்றும் 'தீட்டுப்பட்டவர்'கள் என்றும் கூறுகிறது.

"அவர்கள் (பெண்கள்) தீட்டானவர்கள். அசுசையானவர்கள்; ஆதலால் அவர்களை விட்டுப்பிரிந்து விடுங்கள். அவர்கள் சுத்தமடையாதவரை அவர்களைத் திரும்ப எட்டிப் பார்க்கக்கூடாது" (அ. 11.ப.222)

"உங்களுக்கு வயல்கள் உங்கள் மனைவிகளே; ஆதலால் அந்தவயலுக்கு ஒப்பான மனைவி மார்களை உங்கள் இஷ்டம் போல் நடத்துங்கள்" (அ. 11. ப. 223.)

"ஆண்கள் பெண்களை விட குணத்தில் மேம்பட்டவர்கள். ஏனெனில் 'கடவுள்' அத்தகைய உயர்ந்த குணங்களை ஆண்களுக்கு மட்டும் தந்திருக்கிறார். ஆண்கள் தான் பெண்களைக் காப்பாற்றி வருகிறார்கள். தனதுகணவன் வெளியில் சென்றிருக்கும் காலையில் கற்புடையமங்கையர்கள் ஜாக்கிரதையுடனும், கீழ்ப்படிதலுடனும் இருப்பார்கள். அவ்வாறு இருப்பதற்கேற்றவாறு தான் 'கடவுள்' அவர்களை அமைத்

திருக்கிறார். அவர்கள் மேற்குறித்த ஒழுக்கங்களில் தவறினால் கணவன் தனதுமனைவியை படுக்கையில் படுக்கச் செய்துசவுக்கடி கொடுத்து கண்டித்து வரவேண்டும்.'' (அ. 4,5. 33.)

அதாவது தன் மனைவி துர் நடத்தையாக நடந்தாள் என்றுசந்தேகித்தால் கூட கணவன் அவளைத் தண்டிக்க குர்ஆன் அவனுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆண்களுக்கு விண்ணுலகத்தில் என்றும் மங்காத பொலிவு அளிக்கப்படும்; ஆனால் பெண்களுக்கு அது மறுக்கப்படும் என்று குர்ஆன் சாற்றுகிறது.

விவாகரத்து செய்வது கணவனுக்குத் தான் உரிமை என்று குர்ஆன் வற்புறுத்துகிறது. எந்த விதமான காரணமும் காட்டாமல் ஒரு கணவன் தன் மனைவியை ரத்து செய்து விடலாம். கோர்ட்டுக்குக் கூட சென்று ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லை. பொது ஜனங்கள் முன்னிலையில் 'நான் இவளை ரத்து செய்து விட்டேன்' என்று சொன்னால் போதும். அவ்வளவு தான்! அதோடு முடிவடைந்தது விவாக ரத்து. மத கோட்பாட்டின்படி இத் தகைய காரியங்கள் தான் செய்யப்பட்டு வருகின்றன.

உலக முழுவதிலும் உள்ள முஸ்லீம் பெண்கள் அந்தப் புரத்தில் அடைபட்டு கொடுமைகளுக்கும், துன்பங்களுக்கும், தண்டனைகளுக்கும் இலக்காய் வருகிறார்கள். துருக்கியிலே பெண்கள் அடைந்த சுதந்திரம் இஸ்லாம் மதத்தின் தாராள நோக்கத்தினால் அல்ல, அங்கு இஸ்லாம் மதத்தின் வீழ்ச்சி தான் பெண்கள் சுதந்திரமடைய உதவியாயிருந்தது.

இன்றும், உலக முழுவதிலும் இஸ்லாம் மதத்தில் பெண்கள் வீட்டின் தட்டுமுட்டுச் சாமான்களைப் போல மதிக்கப் பட்டு வருகிறார்கள்; கோஷா முறை மிகவும் கண்டிப்பாக கையாளப்பட்டு வருகிறது. ஒருவன் பல மனைவிகளை விவாகம்செய்துகொள்ளும்வழக்கமுமிருந்து வருகிறது.

இந்தியாவில் படித்த முஸ்லீம்களில் கூட ஒரு மனைவியோடு கூடியவரைப் பார்ப்பது மிக அரிது. அதே விதமாக கோஷா முறையும் கண்டிப்பாகக் கையாளப்பட்டு வருகிறது.

விவாக ரத்து செய்யப்பட்ட பின் ஒரு வருடம் வரை விவாக ரத்து செய்த மனைவிக்கு கணவன் அன்ன வஸ்திரம் கொடுத்து வர கட்டாயப்படுத்தப்படுகிறான். விவாகம்செய்து கொண்ட. பின் கணவன் தன்னிஷ்டப்படி யாதொரு காரண முமில்லாமல் மனைவியை வீட்டை விட்டுத்துரத்தி விடுவான். இவ்வாறு அடிக்கடி வெறுத்துத் துரத்தி அவளைவிட வேறு இளங் கன்னியைக் காதலித்து விவாகஞ் செய்து கொள்ளு வான். ஆனால், கணவனைப் பிரிந்த அதாவது ரத்து செய்யப்பட்ட பெண்கள் மறுமணம் செய்து கொள்ளுவது அவ்வளவாகக் காணமுடியாது. பெண்களுக்கு விவாகரத்து என்றால் அவர்களின் வாழ்க்கை ஒழிந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

குர்ஆனில் உள்ள விதிகள் மாற்றப்படத் தகாதவை என்று எல்லா முஸ்லீம் மத போதகர்களும் வாதஞ் செய்கி றார்கள். இத்தகைய பிடிவாதக்காரர்களால் தான் முஸ்லீம் மதத்தில் பெண்கள் நிலை எவ்விதத்திலும் உயர் நிலை அடையாமலிருந்து வருகிறது.

இவ்வாறு பெண்கள் நிலை முஸ்லீம் மதத்தில் தானி ருக்கிறது என்று ஒருவரும் கருதி விடாதீர்கள். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எல்லா மதங்களிலும் பெண் கள் நிலை இவ்வாறாகத்தான் பரிதாபப்படக்கூடிய அடிமை நிலையிலிருந்து வருகிறது.

மதம் ஆண்களையும் பெண்களையும் அடிமைத்தனத் தில், நீசத்தனத்தில் வைத்திருந்தும், ஒருவரையொருவர் நேசித்துக் கொள்ள வேண்டும் என்று உபதேசிப்பதில் கன்னைப் பெருமைப் படுத்திக் கொள்ளுகிறது.

கல்வியும் கைத்தொழிலும்.

(தி. வே. அ.)

நமது தாய்நாட்டின் தற்போதைய கல்வி நிலைமையினையும், கைத்தொழில்நிலைமையினையும் பற்றி ஆராய்வுழி இவ்விரு நிலையும் இஞ்ஞான்று சீர்கேடடைந்திருக்கின்றனவென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். தற்போதைய கல்வி, கைத்தொழில் சீர்கேட்டினால் நமது நாடு அடைந்திருக்கும் நிலைமையென்ன? எங்கு பார்த்தாலும் பஞ்சம், பசி, பிணி யாகியவைகள் தாண்டவமாடவும், அரசியல் குழப்பம் ஒரு பால் அலை மோதவும், செல்வர்கள் ஒரு பால் கொழுத்துப் புரளவும், இளைஞர்கள் ஒருபால் பெற்றோர்கள் வருந்தித் தேடிய பொருள்களை உயர் படிப்பிற்கென நகரங்களில் ஆடம்பரமான வீண் செலவுகள் செய்து பாழாக்கவும் அங்ஙனம் பாழாக்கிப் பயின்று பட்டம் பெற்றவர்கள் வேலையில்லாது திண்டாடவுமான நிலைமையே பெரும்பாலும் காணப்படுகின்றன. பல்கலைக் கழகங்களில் பயின்று பட்டம் பெற்றவர்கள் முன்னோர் தேடி வைத்த பொருள்களைத் தாம் பயிலும் காலையிற் செலவழித்துக் கழித்தமையாலும் பட்டம் பெற்றபின் தொழில் கிடைக்காத காரணத்தாலும் தாம் கற்ற துறையிலன்றிப் பிற துறையிலும், கைத்தொழிலினும் பயிற்சியின்மையாலும், உணவுக்கே ஊதியந்தேட வழியறியாது பெருந் தொல்லைப்படுகின்றனர். தாய் தந்தையரையும் உற்றார் உறவினரையும் தன்னை நோக்கிவாழும் தன்கீழ் உள்ளோரையும் காப்பாற்றுவதற்கு வகையறியாமற் கலங்குவதல்லாமல் தன்னை வளர்ப்பதற்கே தகுதியற்றவர்களாகி விடுகிறார்கள். உயர்ந்த பட்டம் பெற்றவர்கள் அறஞ்செய்தல், எளியோர்க்குதவுதல், சமூகத்தொண்டாற்றல், பொதுநலம் புரிதலென்றின்னோரன்ன நற்செய்கைகளை நினைப்பதற்கு மில்லாமல் சாணும் வளர்க்க அன்னவர் படுந்துயர் சாற்றரிதாயிருக்கின்றது.

இத்தகைய நிலைக்குக் காரணமென்ன? காரணங்கள் பலவாயினும் அவற்றுள் தலையாயதும் சிறப்புடையதும் தற்கால கல்வி முறையேயாகும். உயர்தரக்கலாசாலைகட்குப்

பயிலச் செல்லுவோர் முன்னிருந்த உடல் வலியையும் பெரும்பாலும் இழந்து விடுகின்றனர் என்றே கூறலாம். ஆகையினாற்றான் பட்டம் பெற்றவுடன் யாதொரு வேலைக்கும் தகுதியுடையவராயிருப்பதில்லை. அதுவன்றியும் பட்டம் பெற்று வந்தவர்களில் பெரும்பாலார் மற்ற மக்களுக்கும் தங்களுக்கும் பெரிய வேற்றுமை இருப்பதாகவும் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமே யில்லை யென்றும் கருதுகின்றனர். இது மிகத் தவறு; பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலார் வெறும் புத்தகப்பூச்சியாக இருப்பார்களே யல்லாது உலக விஷயங்களை சாதாரண மக்கள் அறிந்திருக்கிற அளவுக்கு அறிந்திருக்க மாட்டார்கள். ஆகவே அத்தகையவர்கள் பட்டம் பெறாத உலக விஷயமறிந்தவர்களுடன் கூடிப் பழகி உலக விஷயங்களை அறிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது. பட்டம் பெற்றவர்கள் உலக விஷயங்களை யறியாமலிருப்பதோடு பொது அறிவும் இல்லாதவர்கள் என்பதைக் குறிப்பிப்பதற்காக இரண்டொரு உதாரணங்கள் கூறுகிறேன்.

சமீபத்தில் தாவர சாஸ்திரம் பயிலும் மாணவனொருவன் தன் முன்னிலையில் பல வேப்பை மரங்களிருந்தும் வேப்பை மரம் இது வென்று காண்பிக்க முடியாமற் போனதும், ஒரு மாணவன் தமிழ்நாட்டில் பேசப்படும்மொழி இராமாயணமும் பாரதமும் என்றதும், எனது கூற்றுக்குப் போதிய சான்றாகும்.

இனி, கைத்தொழில் செய்யும் தொழிலாளர்கள் நிலைமையை எடுத்துக்கொண்டாலும் அதுவும் வருந்தக்கூடியதாகவே யிருந்து வருகிறது. முதலாளிமார்கள் தொழிலாளி வர்க்கத்தை வருத்தி வேலை வாங்குகின்றனர்; போதிய கூலி கொடுப்பதில்லை; போதிய ஓய்வு நேரம் கொடுப்பதில்லை; கொடுமையாக நடத்துகின்றனர் என்பன போன்ற குளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இனி, முதலாளிமார்களோ தொழிலாளர்கள் சரியாக வேலை செய்வதில்லை; முதலாளிமார்களை வஞ்சிக்கின்றனர்; ஏமாற்றுகின்றனர் என்பனபோன்றவெண்ணங்களையுடையவராக இருந்து வருகின்றார்கள்.

ஆனால் இருபாலாரிலும் இத்தன்மைக்கு முரண்பட்ட கொள்கையுடையவர்களும் இல்லாமலில்லை. இவ்விருகுளர்ச்சிகளிலும் தொழிலாளர் குளர்ச்சியே பெரும்பாலும் உண்மை

யானதும் கவனிக்கவேண்டியதுமாகும். ஆனால் தொழிலாளிகளிலும் ஏமாற்றுபவர்கள் இல்லாமலில்லை. தொழின் முறைதெரியாத முதலாளிமார்களை தொழிலாளி மார்கள் மற்றெந்த விதத்திலும் ஏமாற்றாவிடினும் தொழின் முறையிலாவது சிறுபான்மையினர் ஏமாற்றித் தான் வருவார்களென்பது எனது எண்ணம். இவ்வாறு செய்வதற்குக் காரணம் முதலாளிமார்கள் தரும் கூலி தொழிலாளிமார்கட்குப் போதாமலிருப்பதே. இதற்குக் காரணம் முதலாளிமார்களின் பேராசையே. ஏன் இவ்வாறு கூறுகிறேனென்றால் தற்காலத்தில் எல்லா வியாபாரங்களும் பெரும்பாலும் ஏமாற்றமாகவேயிருக்கின்றன. பண்டங்கள், துணிகள், கால் நடைகள் முதலியவற்றை மக்கள் வாங்குவதையும் அவைகளுக்கு விலை கூறுவதையும் கவனியுங்கள். விலைக்கு விற்போன் விற்கப்படும் பொருளின் உரிய விலைக்குப்பாதி விலை சேர்த்துக் கூறுவதும் விலைக்குக் கொள்வோனும் அப்பொருள் பெறும் விலையில் அதாவது உரிய விலையில் பாதி குறைத்துக் கேட்பதும் பின்னர் இருவரும் விலை முறையில் மேலிருந்து கீழ்வருதலும்கீழிருந்து மேல்சேறலுமாகியநிலைமையினையே எங்கும் காண்கிறோம்.

ஆகவே இந்த மர்மம் தெரியாதவன் முதற்கூறியதே உண்மை விலை யென்று விலை கூறப்பட்ட பொருளை வாங்குவானாயின் பெரிதும் ஏமாற்றமடைந்தவனாவதோடு பொருள் கஷ்டமும் அடைகிறான். ஆகவே உலக வியாபாரமே பெரிதும் ஏமாற்றமாகத்தான் காணப்படுகின்றது. இதனால் வியாபாரிகளை நஷ்டத்திற்கு விற்கும்படி நான் கூறவில்லை. உண்மையைக் கூறி லாபம் பெறவேண்டுமென்பதே எனது எண்ணம். வேறு தேயங்களில் உண்மை விலையைக் கூறவும் அதே விலைக்குப் பெறுமான நிட்டம் இருந்து வருவதாக அறிகிறேன். அந்நிலைமை நமது நாட்டிற்கும் வரவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகின்றேன். எனவே, இத்தகைய கல்வி நிலையினையும் மகத்தொழில் நிலையினையும் தொழில் முறையினையும் பற்றிக் கூறிக்கொண்டு சென்றால் மிகவும் விரியுமாகையால் அதனைவிடுத்து இனிச்செய்ய வேண்டிய காரியங்களை யாராய்வோம்.

தற்போதைய இத்தகைய நிலைமையினை மாற்றுவதற்கு முதன் முதலில் கல்வி முறையானது திருத்தியமைக்கப்படவேண்டும். அதாவது கல்வி முறையோடு கைத்தொழில்

முறையும் கற்பிக்கப்படவேண்டும். பெரும்பாலும் உத்தி யோகத்திற்காகக் கல்வி பயிலாமல் அறிவுக்காகக் கல்வி பயில வேண்டும். அக்கல்வி முறையிலே பட்டம்பெற்று வெளி யேறும் மாணவன் ஒவ்வொருவனும்தான்கற்றுத்தேறிப்பெற்ற பட்டம் காரணமாக அல்லாமல் வேறு கைத்தொழில் முறை யில் தொழில் செய்யவும் தனக்கு வேண்டிய ஊதியம் பெற வும் கூடிய வகையோடு வெளிவருதல் வேண்டும். தற்காலத் தில் உடற்பயிற்சியென்று சில இடங்களில் செய்யப்படும் அதிக பயன்தராத பயிற்சிமுறைகளையும், பந்தாடுதல்போன்றசிறிது உற்சாகமும் உடல் வலியும் தந்து அரிய பொழுதை வீணாக்கு கின்ற செயல்களையும் விடுத்து, அந்தக்காலங்களில் தோட்ட வேலை, தச்சுவேலை, பிறவைகைத்தொழில்கள் முதலியன பயி ற்றுவித்து அதனால் அவர்கள் பெரும் பயனையடையும்படி செய்தல்வேண்டும். கல்வி முறையிலும் தற்போதுள்ள முறைகளில் பல திருத்தங்கள் அமைக்கப்படவேண்டும். ஒரு வன் தனது வாழ்நாளில் ஒருநாளும் உபயோகிக்காத எண் களையும், கணக்குகளையும், பாடல்களையும், விஷயங்களை யும் நெட்டுருப்பண்ணுவதால் வினையும் பயன்யாது? பயன் ஒன்றுமில்லாவிடினும் தீமைபாவது விளையாமலிருக் கிறதா? அதுவுமில்லையே! அறிவும் திறமையும், இளமையும், இத்தகைய வீண்செயல்களில் பாழாக்கப்படுதல் சிறப்புடைய தாகுமா? தனது நாடு, நாட்டிலுள்ள சிறப்பு, அதன் இயல்பு முதலியவற்றைத் தெரியாதவன்பிறநாட்டிலுள்ள சிறப்புகள், அதன் தன்மைகள் முதலியவற்றை அறிவதாற் பயனென்ன? தன் நாட்டில் வழங்கும் கணிதத்தையும் செலாவணிப்பொ ருள்களின் மதிப்பையும் அறியாதவன் பிறநாட்டில் வழங்கும் கணிதத்தையும் பொருளின் மதிப்பையும் அறிவதாற் பய னென்ன? இப்படியே தனக்கும் பயன் படாதவைகளையும் வேண்டாதவைகளையும் விரும்பி விரும்பிக் கற்பதும் வருத்தி வருந்திக் கற்பிப்பதும் மாணவர்களின் இளமையினையும் அறிவினையும், திறமையினையும் பாழாக்குவதேயாகும். ஆனால் வெளிநாட்டு விஷயங்களையும் பிறமொழிகளையும் அறியக்கூடாதென்று நான் கூறவில்லை. அங்ஙனம் கூறு வது குறுகிய மனப்பான்மையாகும்; அறிவைத் தடைசெய்வ தாகும். நமது நாட்டின் மொழியை நன்கு கற்று, ஏனையவைகளைவேண்டிய அளவுக்குப் பயிலவேண்டு மென்பதே எனது அபிப்பிராயம். தற்கால மாணவர் களையும், பட்டம்பெற்றவர்களையும் எடுத்துக்கொள்ளுங் கள். நமது நாட்டைப்பற்றியும், நாட்டு மொழியைப்பற்றியும்

கலைகளைப்பற்றியும் ஒழுக்க முறையினைப்பற்றியும் நம்நாட்டில் தோன்றி வளர்ந்த பெரியார்களைப்பற்றியும் ஒருசிறிதும் உணராமலிருந்தாலும், பிறநாட்டுமொழி, அதனிலக்கணம், பிறநாட்டறிஞர் தன்மை முதலியவற்றைத் தாராளமாகக் கூறுவர். இந்நிலைமை அறிஞர் எள்ளி நகையாடற்பாலதே. இப்பொழுது ஸ்கூல் பைனல்வகுப்புளன்னும்எஸ்.எஸ்.எல்.சி. பயின்று தேறியவர்களில் பலபேர் எழுவாய் பயனிலையோடு வாக்கியத்தை முடிக்க முடியாமல் திகைப்பதைஎத்தனையோ முறை நேரிலேயே பார்த்திருக்கிறேன். இவைகளையெல்லாம் நினைக்கும்போது, பொதுவாகப் பரீக்ஷையென்பது மாணவர்களுக்கு அறிவை ஒரு அளவுக்கு விருத்திசெய்தாலும் ஒரு அளவுக்கு அறிவு, திறமை, இளமை முதலியவற்கைக் கொள்ளை கொள்ளும் யமனென்றே கருதவேண்டியிருக்கிறது. அதோடுமட்டு மல்லாமல் பிற்கால வாழ்விற்கு எந்த வழியிலும் உபயோகப்படாமல் மாணவர் திறமை, உடல் நலம் முதலியவைகளையெல்லாம் பாழாக்கும் ஒரு கொடிய நோயென்றும் கூறவேண்டியிருக்கிறது. தற்காலத்தில் ஒரு மாணவன் பரீக்ஷையில் தேறினான் என்றால் அவன் எதற்குத் தகுதியுடையவனாகிறான்? வீடமை வாழ்க்கைக்கா? அறிவு வாழ்க்கைக்கா? தற்பொழுதைய கல்வித் தொச்சியின் நோக்கமென்ன? தோழர்களே! நெஞ்சில் கையைவைத்து உண்மை கூறுங்கள்; மறைக்காதீர்கள். பெரும் பான்மையும் சுயநலங்காரணமாக வேலை தேடுவதற்கும்பெருமையடைவதற்குமல்லாமல்வேறுநோக்கம் இருப்பதாகனனக்குப்புலப்படவில்லை. இத்தகையவர் நாட்டிற்கு யாது நலம் செய்வர்? தனது வளருக்கு யாது செய்வர்? ஒன்றுமில்லையன்றோ? எனவே இத்தகைய கல்வி முறையானது அடியோடு மாற்றமடைந்து சீர்திருத்தமடைய வேண்டும்; கைத்தொழில் முறை கல்வி முறையொடு புகுத்தப்பட வேண்டும்.

இனி, இயந்திரங்கள் கைத்தொழிலுக்குக் கெடுதி செய்கின்றன என்பது ஒரு கிளர்ச்சியாக இருந்து வருகிறது. எல்லா மக்களும் நன்மையும் லாபமும் அடைய விரும்புவார்களேயல்லாமல் தீமையையும் நஷ்டத்தையும் அடைய விரும்பமாட்டார்கள். ஆகையால் இயந்திரங்களால் எற்படும் நன்மைகளையெல்லாம் கைக்கொண்டு தீமைதருவன உளவாகின் அவற்றையெல்லாம் தூரத்தள்ளுதல் மிகவும் அவசியமாகும். எத்தகைய கொள்கையாரையும் எத்தகைய செய்கையையும் ஆராயாது உண்மையல்லவென்றும் நன்மை

மூர்த்தி வ்தல பூஜையும்
தீர்த்த யாத்திரையும்.

(கைவல்யம்)

இப்பொழுது நாம் கடவுள் திருப்திக்காகவென்று செய்து கொண்டுவரும் கருமங்கள் என்ன? அக்காரியங்களால் கடவுள் திருப்தியடைகின்றாரா? அதனால் நமக்கு ஏதாவது பலனேற் படுகிறதா? என்பவைகளைக் கவனிக்கவேண்டியது நம்முடைய முதற்கடமையாக இருக்கிறது. நம்முடைய கஷ்டம் நீங்கவோ, சுகம் ஏற்படவோ, அல்லது நாம் கோரின காரியங்கள் கைகூட வோ, அல்லது மனைவி, சுற்றத்தார் இவர்கள் நடக்காகக் தரக்கூடியதல்லவென்றும் மறுப்பதும் தூற்றுவதும் அறி வுடையோர் செயலாகாது. எந்தக் கொள்கையிலும் செயல் முறையிலும் நன்மையும் தீமையும் உண்டு. ஆகையால் "குணகாடிக் குற்றமுகாடி அவற்றுள், மிகைகாடி மிக்க கொளல்" என்ற அறிஞர் கூற்றுப்படி நன்மை மிகுத்தசெயல் களையும் கொள்கைகளையும் கைப்பற்ற வேண்டியது அறி ஞர் கடனாகும்.

இதுகாறுங் கூறியவாற்றால் கல்வி, கைத்தொழில் சீர் கேட்டினால் நமது நாட்டின் தற்கால நிலை மிக வும் சீர்கேடற்று இருக்கிறதென்பதும் இச்சீர்கேடுகள் பெரும் பாலும் கல்வியால் உண்டாகின்றன வென்பதும், இச்சீர்கே டுகள் ஒழிவதற்கு தற்போதைய கல்வி முறையில் பெரிதும் மாற்றம்செய்யவேண்டுமென்பதும், கைத்தொழில்முறை கல்வி முறையொடு கற்பிக்கப்படல்வேண்டுமென்பதும்கைத்தொழில் இன்னும் அதிக விருத்தியடைய வேண்டுமென்பதும் அங் ஙனம் விருத்தியடைந்தால்தான் நமது நாடு நலம் பெற்று பஞ்சம், பசி, பிணியாகியவைகள் ஒழியுமென்பதும் தாய் காட்டுப்பற்றும தாய் மொழிப்பற்றும் மிகவும் அவசியமென் பதும் பிற்காலத்துக்குப் பயன்தரத்தக்க கல்வியே பயிறல் வேண்டுமென்பதும் இவை போன்றன பிறவும் இனிது விளங்கா நிற்கும்.

கோரிக்கொண்ட பிரார்த்தனையை முடிக்கவேவா, அல்லது சோதிடன், புரோகிதன் முதலானவர்கள் நமது நன்மைக்கென்று சொல்லும் பிராயச்சித்தங்கள் செய்யவேவா, அல்லது புண்ணியம் அடையவேவா, பாவந்தொலையவேவா, பணச் செருக்கைக் காட்டவேவா, அல்லது அக்கம்பக்கத்தார் நம்மைப்பற்றி பெருமையாக நினைக்கட்டும் என்கிற ஆசையாலேவா நாம் இப்பொழுது செய்யும் கர்மங்கள் என்னவென்றால், பெரும்பாலும் திவ்யஸ்தலயாத்திரை, தீர்த்தயாத்திரை, பிரார்த்தனை, பூசை, ஜபதப ஓமம் முதலியனவாகவேயாகும். இவையனைத்தும் கடவுளை வழிபடும் சமய ஒழுக்கங்கள் என்று சொல்லப்படும் உண்மையான சமய ஒழுக்கத்தின் தத்துவமென்னவென்றால் உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியேயன்றி வெறும் வெளிச் சடங்குகளல்ல.

நிர்மல பக்திக்கும் சில தன்மைகளையவேண்டும். அவை வந்தடையவே வெளிச்சடங்கையும் மைத்தார்கள் முன்னோர்கள். இந்திரிய ஜெயமும், சத்திய வசனமும், தயாளமும், விஷயங்களிலுள்ள தோஷங்களை ஆலோசிப்பதும், அடக்கமும், பொறுமையும், ஆசையில்லாமையும், மிதமான ஆகாரமும் தேகத்தின் உபாதிகளை சகித்தலும், விஷயங்களை விலக்குதலும், மித வசனமும், இந்திரியங்களின் அடக்கமும் எற்படவே இந்த விதிகளும் கர்மங்களும் ஏற்படுத்தியிருக்கின்றன. எவனுக்கு எதுவெது பிரியமுள்ளதோ அவனுக்கு அதையதை சுகமென்று சொல்லுகிறார்கள்; இஷ்டமில்லாதது எதுவோ அதுவே துக்கமென்று கூறுகிறார்கள். 'இஷ்டமாயிருப்பது எனக்குக் கிடைக்கவேண்டும். இஷ்டமில்லாதது எனக்கு வேண்டாம்." என்னுமிவ்வாசையை நிறைவேற்ற கர்மங்களின் விதியானது நடைபெற்றிருக்கிறது. இஷ்டமும் அநிஷ்டமும் எனக்கு வேண்டாமென்ற இந்த நிலையை அடையவேண்டிஞானத்தின் விதியானது நடை பெற்றிருக்கிறது. சாஸ்திரங்கூறியுள்ள கர்மவழிகள் ஆசையுள்ளவனைப் பற்றினவையாயிருக்கின்றன. இவ்வாசைகளிலிருந்து விடுபட்டவன் பரப்பிரம்மமான பொருளை யடைவான். சுகத்தை விரும்பும் மனிதன் பலனிதமான கர்ம வழியில் பிரவர்த்தித்து நாகத்தையடைவான். ஆசைக்கே கர்மங்களின் விதியானது நடைபெற்றிருக்கிறது. ஆசையற்ற மன முதலிபவற்றைக்கொண்டு செய்யப்படும் கர்மங்களால் விளங்குகின்றவனும், மனதில் பிரகாசமென்னும், சுத்தியை அடைந்தவனும், கர்மத்தில் பிரவர்த்தித்தவனும், மோக்ஷ சுகத்தை விரும்பத் தக்கவனாவான் என்பனவேதவேதத்தின் கருத்து. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்

தொடங்கினவர்க்கு வார்த்தை சொல்லச் சற்று நேரமும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமானவர் சொன்னது மிதுவே. இந்து மதக்கருத்தே மோக்ஷத்தின் ஆசைக்கே கர்மங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன என்பது. இப்பொழுது நாம் செய்யும் கர்மங் களானவை வழக்கத்தையும் பழக்கத்தையுமொட்டி, அவர்கள் செய்தார்கள் நாமுஞ்செய்வோம், இவர்கள் செய்தார்கள் நீங்க ளுஞ் செய்யுங்கள் என்று செய்யப்படுகிறதேயொழிய, பக்தி யோ மன சுத்தமோ அடைய வழியிருக்கிறதா என்பதில் கவ லையில்லை. இப்பொழுது நாம் செய்யும் காரியங்கள் காசிக்குப் போய் கங்கை கொண்டுவருவது, இராமேஸ்வரம் போய் நாகப்பிரதிஷ்டை செய்வது, திருப்பதிக்குக் காணிக்கை கொண்டுபோவது, பழனிக்குக் காவடி எடுப்பது, ஸ்ரீரங்கத்தில் சட்டிபானை வாங்கி அக்கார அடிசில் படைப்பது, சிதம்பரத் தில் பாவாடைபோர்த்துவது, இப்படி இன்னும் அநேகக் கோயில் களில் நெய், பால், தேன், கற்கண்டு, சீனி, பாதாம், முந்திரிப் பருப்பு, திராட்சை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, புனுகு, ஜவ்வாது, சந்தனம், பனிநீர் முதலிய அநேகவித சா மான்களால் அநேகவித பட்சணங்கள் செய்து அங்கு தெவிட்டிக் கிடப்பவர்களான குருக்கள், அர்ச்சகர்கள், ஆழ்வார்கள், ஆச்சாரிகள் இவர்களைச் சாப்பிடச் செய்வதும் மற் றும் இதற்காக வாங்கின சாமான்களில் கடைக்காரன் கொடுத்த காசும், இவர்கள் திருடினதும் போக மீதி சாமான் களில் பட்சணம் பலகார முதல் நிவேதித்தித்திற்குச் செய்ததில் பாதியை முன்னமே திருடி மற்றதை சாமிக்குக் காண்பித்து உங்களிடம் பிரசாதமென்று கொடுக்க நீங்கள் அதிலும் பாதியை அவர்களை எடுத்துக்கொள்ளச்சொல்லி, "இல்லை யில்லை, பிரசாதம் தங்களுக்கே இருக்கட்டும்" என்று அபி நயித்து யோக்கியராகக் காண்பிக்க நடித்து மீதி முக்காலு மெடுத்து பக்கத்திலிருக்கும் வேறு பக்த கோடிகளுக்குச்சாமி பிரசாதத்தை பக்தியாகப் பிரதிப் பிரயோஜனமில்லாமலே வழங் குவதுபோல் வழங்கி, புரோக்கர்கள் மூலமாகவோ தாங்களா கவோ கொடுத்த பிரசாதத்திற்கு மறுபடியும் பணம் வசூல் செய்துவிடுவார்கள். அபிஷேக பூசை அர்ச்சனைகளுக்கு தக்ஷணையில் தர்க்கமில்லாமலிருந்ததேயில்லை. "சாமிக்கு அதை வைத்தோம், இதைப் படைத்தோம், எதை விட்டுவிட் டோம்; உங்கள் பூசை சமயம் வேறு யாரையாவது விட் டோமா? எல்லோரையும் பிடரியைப் பிடித்துத் தள்ளவில் லையா? கோயில் அதிகாரியின் கோபத்திற்குப் பயந்தோமா? அவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டாமா? எல்லா நியாய

மும் தெரிந்த நீங்களே கோயிலில் செட்டு பண்ணினால் காரியங்கள் நடக்குமா? நாங்கள் இவ்வளவு விசேடமாக சாமிக்குச் செய்திருக்கப்படாது. நீங்கள் பெரிய மனிதர்களானதால் மரியாதை தெரிந்து நடப்பீர்களென்று செய்து வைத்தோம். அந்த செட்டியார் வந்தார் அவ்வளவு கொடுத்தார், இந்த மார்வாடி வந்தார் இவ்வளவு கொடுத்தார்" என்னும் விஷயங்களைக் கேட்டு நமக்கும் கோபம் வந்து "உங்கள் அயோக்கிய புத்தி உங்களை விட்டுப் போவதில்லை. கோயிலுக்கு வந்தாலே உங்கள் இழவுக்கு மாரடிக்க யாராலாகும்" என்று வருத்தப்பட்டு கோபம் மீண்டும் அதிகம் வருகையில் பக்கத்திலிருப்பவர்கள் "இவ்வளவு கஷ்டப்பட்டு யாத்திரை வந்த இடத்தில் இந்தப் பார்ப்பாரோடு சகாறு எதற்கு? ஏதோ கொடுப்பதைக் கொடுத்துத் தொலையுங்களேன்?" என்று சொல்ல, முகக்கடுகடுப்போடு அவன் கேட்பதைக் கொடுத்து முகத்தைச் சுளித்து, கோயிலுக்குப்போன உற்சாகத்தையும் திருப்தியையும் விட்டு, மன சுத்தத்தையும் மறந்து சுவாமி பக்தியை அடியோடு ஓட்டி, தங்கி இருக்குமிடம் வந்து சேருகிறோம். அங்கும் விட்டபாடில்லை. வந்து விடுகிறான் தரகன். ரயில்வே போர்ட்டர்கள் தொந்தரவு ரயில் சகர்ந்தால் தீரும். பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறவரையிலும் இவன் சகாறு தீருவதில்லை. வேடர்கள் சுற்றுமிடத்தில் எதாவது மிருகங்கள் அகப்பட்டுக் கொண்டால் இரக்கமில்லாமல் எப்படிக் கொன்று பிய்த்துப் பிடுங்கி சுட்டுத் தின்று விடுகிறார்களோ, அப்படியே கோயிலுக்குள் வெள்ளை வேஷ்டியோடு ஒருவன் வந்துவிட்டால் மரியாதை, ஞாயம், வெட்கமுதலியவைகளில்லாமல் பிய்த்துப்பிடுங்கி இருக்கிற பணத்தையெல்லாம் கொள்ளை கொண்டு விடுகிறார்கள். கோயிலென்பது வியாபாரக் கடையா? அல்லது ஒவ்வொரு இடத்திற்கும் பணம் கொடுத்து வேடிக்கைப் பார்க்கும் பீபிள்ஸ்பார்க்கா? மற்றும் நாம் அர்ச்சகர்களுக்கு எதாவது கொடுக்காவிட்டால் இவர்கள் காலசேஷபம் எப்படி நடக்கும் என்று சிலர் தர்ம நியாயம் பேசுவார்கள். ஒரு வழியில் அது நியாயம் என்று வைத்துக்கொண்டாலும், சீமைக் கமலங்களுக்கும் பெங்களூர் புடவைக்கும் இந்தக் காலத்து நாகரீகமான எல்லாவித சுகங்களுக்கும் ஆசைப்பட்டு, பொருள் சம்பாதிக்கவா இவ்வர்ச்சகர்களுக்கு சாஸ்திரம் விதித்திருக்கிறது? இவர்கள் இல்லற தர்மம் நடப்பதற்கும், நித்திய கர்மானுஷ்டானங்களுக்கும் இவர்களுக்குவிடப்பட்டமான்யமும் சம்பளமும், யாத்திரைவாசிகள் கட்டத்தில் மனதாரப்போடும் காணிக்கைகளும் போதுமானதாயிருக்கும். சர்க்கார் உத்தியோ

கஸ்தர்களை உங்கள் சம்பளத்திற்குமேல் "மேல் வரும்படி என்ன" வென்று கேட்பதுபோல், இவர்கள் பிழைப்பும் ஆகிவிட்டது. இவர்கள் மதப்படிப்பிலும் உலக அறிவிலும் கொஞ்சமும் அனுபோகம் கொள்வதில்லை. அப்பனுடைய வார்சு மகனுக்கே என்கின்ற ஒரு கல்வியைத் தவிர, மகன் மதத்தைப்பற்றி யாவது சாஸ்திரத்தைப் பற்றியாவது படிக்க வேண்டுவதில்லை. அந்தந்த கோயில்களைப்பற்றி யுக்திக்கும் சாஸ்திரத்திற்கும் ஒத்துவராத மூடக்கதைகளை முட்டாள் தனமாக உளறித் தெரிந்தாலே மதமும் சாஸ்திரமும் தெரிந்தவனாகப் பாவிக்கப் படுகிறான். "கோயில் எதற்காகக் கட்டப்பட்டது? தெய்வ பக்தியை எப்படி உண்டு பண்ணுவது? அதனால் மோட்ச வழியை எப்படிக் காண்பிப்பது? கோயில், தெய்வம், பக்தி, மோட்சம் என்பது என்ன? எதற்காக நாம் ஏற்பட்டிருக்கிறோம்?" என்பவைகளை கொஞ்சமும் அறியாமல் போய்விட்டார்கள். இதைப்பற்றின விஷயங்களனைத்தும் வாசகர்களுக்கே தெரிந்தவையாகையால் விவரிக்காமல் நிறுத்திவிட்டேன்.

பணக்காரர்கள் தங்கள் நட்சத்திரம் வருநாளில் அர்ச்சனை செய்ய ஒவ்வொரு கோயில்களிலும் கட்டளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு அர்ச்சகனுக்கும் அநேகரிடம் அநேக கட்டளைகளுண்டு. வருடத்திற்கு ஒரு தரமோ இரண்டு மூன்று வருடத்திற்கு ஒரு தரமோ வந்து பணம் வாங்கிப்போவான். சிலர் அனுப்பியும் விடுவார்கள். சில அர்ச்சகருக்கு வருஷத்தில் 2000, 4000 ரூபாய்கூட வருமானம் வரும். ஆனால் அர்ச்சனை மட்டும் செய்வதில்லை. அச்சடித்த காகிதமிருக்கிறது. குங்குமமும் விபூதியும் சுருட்டி ஜாதிக்காய்ப் பெட்டியில் மடித்தே வைத்திருக்கிறது. பட்டிகையில் கண்ட பெயர்களுக்கு மாதா மாதம் அனுப்பி விடுவார்கள். அர்ச்சனை யென்பது 108 தடவையோ 1008 தடவையோ சுவாமியின் பெயரைச் சொல்லி, விபூதியோ குங்குமமோ சுவாமியின் பாதத்தில் போடுவது. அங்குஉண்மையாகவே போட்டால் இங்குஇவர் கட்கு என்ன லாபமென்று கேட்டால், பக்தி இல்லாதவன் என்று ஒரே வார்த்தையில் கேட்டவனைத் தொலைத்துவிடுகிறார்கள்.

அர்ச்சகரே! நீங்கள் பண வசூலில் பதினாரு மாதமுமிருக்கிறீர்களே, அர்ச்சனை எப்படி நடக்கிறது என்று கேட்டால், அதற்கெல்லாம் ஆள் வைத்து வந்திருக்கிறேன் என்பார்கள்.

நம் வீட்டு காரியத்திற்கு சில பெரிய மனிதர்களைக் கூப்பிட நாம் போகாமல் ஆளோ காகிதமோ அனுப்பினால் அவர்கள் கோபித்து நம் காரியத்திற்கு வருவதேயில்லை. பீஸ் வாங்கின ஒரு பெரிய வக்கீல் சின்ன வக்கீலை கோர்ட்டுக்குப் போகச் சொல்லி அவனும்போய் ஒன்றும் தெரியாமல் விழித்துவிட்டு கேசைசக் கெடுத்துவிடுவது பிரத்தியட்சம். இதையெல்லாம் விட அர்ச்சகர்கள் செய்யும் புரட்டிலும் நம்மை ஆளாக்குகிறார் கடவுள். இந்தப்புரட்டும், விவாமில்லாத நாமுமில்லாவிட்டால் அர்ச்சகன் வீட்டு பொம்மைக் கலியாணத்திற்கு 500, 1000 எப்படிச் செலவிடுவது? இவைகளைத்தான் சாமியின் பெயரால் செய்யும் புரட்டு என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது. கோயிலிருக்குமிடங்களிலேயே தாசிகள் வீடும், விபசாரங்களும், கள்ளுக்கடை, சாராயக்கடை குத்தகைகளும் அதிகமிருக்கின்றன. காரணம் என்ன? பாடில்லாமல் பறக்கும் பணமென்றால் பொருந்தாதே? சுவாமிக்குப்படைக்கப்பட்டதும் சாத்தப்பட்டதும் யார் வீட்டில் நிறைந்துகிடக்கிறது? அர்ச்சகர்களும் தாசிகளும் கோயில்களில் விளையாடும் வேடிக்கைகளில் நாமும் சேர்ந்து தமாஷ் பேசுகிறோம். அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நம் மைனர்கள் அடுத்த தடவை தாசிகளில்லாமல் கோயிலுக்குப் போவதில்லை. கெட்ட பழக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள உற்சவாதிகளே காரணமாயிருக்கின்றன. இந்த உற்சவங்களில் கட்டளைகளும் பிராம்மண போஜனங்களும் ஆங்காங்குள்ள பணக்காரர்களால் செய்யப்பட்டும், மானியம் விடப்பட்டுமிருக்கின்றனவே, அந்த குடும்பங்கள் இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன? குடும்பப் பெயர் சொல்ல ஆள் இல்லை. ஆள் இருந்தாலும் சோற்றுக்கில்லை. ஏழைச் சம்பள ஆளுக்கு ஒரு ரூபாய் அதிகமோ, பண்டிகைக்கு ஒரு வேஷ்டியோ கொடுக்க மனம் வராத பணக்காரன் அநேக பணத்தை திருப்பதி உண்டிகையில் போட்டு விடுகிறான். தன் மரண காலத்தில் பக்கத்திலிருந்து உழைத்த ஆளை மோசம் செய்து, ஒரு பூமியை சாகும்பொழுது ஏதாவது ஒரு கோயிலுக்கு எழுதிவைத்து விடுகிறான். மகந்துக்கள் ஜலக்கிரீடை செய்வதற்கும், கோயிலில் பணம் திருடின கேசுகளுக்கும், தன் தாசியை இன்னொருவன் கைப்பற்றினான் என்கிற கொலைக் கேசுக்குந்தானே இந்த தர்மங்களெல்லாம் செலவிடப்படுகின்றன!

இந்த அக்கிரமமான செலவுகளை ஒழிப்பதற்கு ஒருசட்டம் சட்ட சபையில் பாஸ் பண்ணி வைத்தால் அதை ஒழிக்க மடாதிபதிகளும் மகந்துக்களும் கோவில் சொத்திலேயே லட்ச

லட்சமாக வக்கீல்களுக்கு கொடுக்கிறார்கள். வாங்கி இவர்களை ஏமாற்றும் வக்கீல்களோ நமக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுப்பவர்களாம! நாம் அறியாமையால் சுவாமி சுவாமியென்று செலவு செய்யும் பணமெல்லாம் பாழாகிறதே யொழிய நமக்கு ஒரு பலனுமில்லை. இம்மாதிரி சாமிக்குச் செய்த குடும்பங்களெல்லாம் பாழாயிற்றே யொழிய முன்னுக்கு வந்த குடும்பமேதாவுண்டா? கோயிலிலிருந்து கொண்டு பிழைக்கும் ஒரு கூட்டத்தார் பொய்யும் புளுகும் கட்டிக்கொண்டே வருகிறார்கள். "திருப்பதியில் வெங்கடாசலபதி ஒரு பையனாக வந்து பேசிக்கொண்டிருந்தார். பையனைப்பற்றி விசாரிக்கையில் மறைந்து போய்விட்டார். வட தேசத்திலிருந்து ஒருவன் உண்டிகை கொண்டு வந்தான். உண்டியலை போட நோமாய் விட்டது. மயங்கி விழுந்து விட்டான். பின் அவன்மேல் போட்டிருந்த நகைகளையெல்லாம் கழற்றிப்போட்ட பின்பு தான் மயக்கம் தெளிந்தது. சீரங்கத்தில் விபீஷணாழ்வார் மாத மாதம் வந்து பூசை செய்து விட்டுப்போகிறார். நாங்கள் போட்ட பூ உலர்ந்து விட்டது; அவர் போட்ட பூ அப்படியே இருக்கிறது. அவர் விளக்கு அப்படியே எரிகிறது" என்னும் கதைகள் புரட்டாசி மாதக் கடைசியிலும், "பழனியில் மச்சக் காவடி வந்தது. பறந்து போய்விட்டது. பாம்புக்காவடி ஒன்று வந்திருக்கிறது. சொப்பனம் உண்டாகி பால்காவடி கொண்டு வந்தான் ஒருவன். பால் பொங்கவில்லை, நாக்கை அறுத்துவைத்துப் பாவாடம் கிடக்கிறான்" என்னும் கதைகளை தை மாதமும், ஐப்பசி மாதமும் கேட்கலாம். இதை நேரில் கண்டவர்களாவது விசாரித்து சரியாய் தெரிந்தவர்களாவது உண்டா? இல்லை. அவன் சொன்னான், இவன் பார்த்தான் என்பார்கள். இதை உண்டு பண்ணுகிறவர்கள் கோயிலால் பிழைப்பவர்கள். கடவுள் சர்வ சக்தியுடையவர் என்று கூறிக் கொள்கிறோம். ஆனால் அக்கடவுளை ஒரு சிறு செப்பிடு வித்தைக்காரனாகச் செய்து, ஜனங்களின் விசாரணையின் அறிவைக்கெடுத்து, இவைகளுக்குச் செலவு செய்வதே உத்தமமான தருமமென்று மௌடீகத் திருப்தியில் கொண்டு வந்து, ஜனங்களும் தேசமும் முன்னுக்கு வரும் செலவிற்கு மனம் அலட்சியமடைந்து, கடவுளால் மனிதனுக்கு ஏற்படுத்தின கடமைகளை மறந்து நாமும் நம் தேசமும் பாழடைகிறோம். கோயிலில் விசேடங்களுக்குப்போய் திரும்புபவர்கட்கு ஜுரமோ வாந்தி பேதியோ வராமல் தடுக்க அந்தந்தச் சுவாமி

மனமென்பதொன்றுண்டா?

(தோழர் ம. சிங்காரவேலு எழுதியது)

பண்டைக்காலந் தொடங்கி, 1912ம்வருடம் வரை சரீரத் திற்குள் மனம் என்பதாக ஒன்றுஉண்டென்றும், அந்த மனத் தினால் தான் நாம் எண்ணுகின்றோ மென்றும், நமது எண் ணம் திரேகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், அது திரே கத்திற்கு அந்நிய மென்றும், நமது மனம், நமக்குள்ளே தெரியுமே அல்லாது, பிறர் கண்ணுக்காகிலும், பிறர் பரீட் சைக் காகிலும் உட்படாவென்றும், மானவ நூல்கள் (Psychology) சொல்லிக்கொண்டு வந்தன. மானவநூல் அதாவது, மனதைப் பற்றி பேசும் நூலுக்கும், மற்ற பூத பௌதிக நூல்களுக்கும், இதுவே விதண்டியாசமாக இருந்து வந்தது. பிரபஞ்சப் பொருள்கள் யாவையும், வெளிமுகமாக பார்க்கலாம்; வெளி முகமாக பரீட்சிக்கலாம். வெளி முக (புற) ஆராய்ச்சிக்கு, சகல வஸ்துக்களும் உட்படுகின்றன. ஆனால், நமது எண்ணம் மாத்திரம், சூட்சுமப் பொருளென் றும், கண்ணுக்குப் புலப்படக்கூடியதல்ல வென்றும் செல்லப் பட்டு வந்தது. மனமென்றால் என்ன? எண்ணமென்றால் என்ன? இதற்கு ஆதிகாரணமென்று கூறப்படும் ஆன்மா, கடவுள் என்றால் என்ன? என்ற இந்தக்கேள்விகளுக்கு, உள்

களுக்கும் சக்தி இல்லை; இம்மாதிரி யாத்திரைக்குப்போன விடத்தில் வியாதி கொண்ட பக்த கோடிகளுக்கு நோயடை யாத பக்த கோடிகள் உதவி புரிவதுமில்லை. ஜீவகாருண் யத்தை முன்னிட்டாவது பாத்திரக்களிம்பு, வியர்வை, பொடி யோடு கூடின மூக்குச்சளி, கீழுமேலுமுள்ள அரை அழுக்கு (ரிங்வாம்) என்னும் படையின் மேல்தோல் இவைகளை பதார்த் தத்தில் அர்ச்சகன் சேர்க்காமலிருப்பதில்லை. கோயிலுக்குப் போய் வந்த வாசகர்களான உங்களுக்கு இவைகளெல்லாம் தெரிந்ததே.

புகுந்து பார்த்தால் தான் தெரியுமென்று மனு நூலாசிரியரும் மதஸ்தரும், மததத்துவ நூலாசிரியரும் சொல்லிக் கொண்டு வந்தனர். மனம், சித்தம், எண்ணம், ஆன்மா, கடவுள் இந்த பதங்களால் குறிக்கப்படும் பொருள் இன்னவை என்று உறுதியாக, யாரும் விண்டிலர். எனினும் இந்தப் பதங்களைப் பற்றி எழுதியுள்ளனவும், எழுதி வரப்பட்டனவுமான நூல்கள் கோடான கோடியே. இந்த சொற்களின் மேல் கட்டிய கதைகளென்ன? எழுந்த தர்க்கங்களென்ன? ஆனால், பகிர்முக (வெளி) விசாரணையில் இந்த பதங்கள் ஒன்றுக்கும் பொருள், அதாவது, வஸ்து இன்னதென்று ஏற்படுவதாகக்காணோம்.

பூதப் பிசாசுகள், இருளன், வீரன், குட்டிச்சாத்தான், முனீஸ்வரன், நாகம், மோட்சம், சிவன்விஷ்ணு, கடவுள் சாத்தான் போன்ற சொற்கள் எந்தப்பொருளையும் குறிக்காதது போல், மனம், எண்ணம், சித்தம், சைதன்யம், சிதாகாசம், கியாபகம், இயற்கை எண்ணம், பரம்பரை எண்ண முதலியன கற்பனா வார்த்தைகளென்றே நடத்தை ஆராய்ச்சியால் விளங்குகின்றது. இந்த ஆராய்ச்சியில் "சித்து, சடம்" என்ற பதங்கள் வித்தியாசத்தை இழந்ததாகப் காணப் படுகிறது. மற்ற மெய்ஞ்ஞான நூல்களிலிருந்து "சித்து" என்ற வார்த்தை விலக்கப்பட்டது போல், நடத்தை நூலிலும் சித்து மனம், எண்ணம் முதலிய வார்த்தைகள் நீக்கப் படுகின்றன.

நடத்தை நூலாவதென்ன? மனிதனுடைய நடத்தை அல்லது நடக்கையைக் குறித்து பேசும் நூலாகும். நடத்தையைத் தான் நாம் பார்க்கின்றோம். சுய அல்லது இயற்கை அறிவு Instinct என்று சொல்வதும், பயம், கோபம், அன்பு என்று அழைப்பதும் Emotion எண்ண மென்பதும் Thought சகலமும் நடத்தையே. நமது அவயவங்களின் நடத்தைகளே இந்த நடத்தைகளுக்குக் காரணமாகும். நமது திரேக அவயவங்கள், வெளியில் உண்டாகும் தூண்டுதலாலோ அல்லது உள்ளே உண்டாகும் தூண்டுதலாலோ Stimulus அசைவுறுகின்றன. Response இந்த அசைவுகள் தான்நடத்தையாகத் தோன்றுகின்றன.

பிறந்த குழந்தையை முலைப்பாலுண்ணத் தூண்டுதல் செய்தவுடன், அது, சலனிக்க அதாவது அசைய ஆரம்பிக்கிறது. இதைத் தான் பால் உண்ணுகிறதென்று சொல்லுவது. வயிற்றில் ஒன்று மில்லாவிட்டால் குடல் அசைந்து தொண்

டையைத் தூண்டுகிறது. இந்தத் தூண்டுதலால் தொண்டை சலனிக்கிறது. அதைத்தான் அழுகைனன்றுவழங்குகின்றோம். இதே மாதிரியாகவே ஈரல், இருதயம் முதலிய அவயவங்கள் சலனமுற்றால், பயமோ கடுக்கமோ தோன்றுகின்றது. அழும் குழந்தையை உதட்டை மெதுவாகத்தடவினாலும், அல்லது ஆண் பெண் அவயவத்தை தொட்டாலும் அழுகை நின்று முகமலர்ச்சி பெறுகிறது.குழந்தையைத் தலைகீழாகத்தொங்க விட்டால் கடுக்கமுறும். அசைவுறாமல் தடுத்தால் கோபமுறும். ஆகையால் பச்சிளங்குழந்தைகள் காட்டும் அழுகையும் கோபமும் பயமும் அதன் அவயவங்களின் சேஷ்டையே. இந்த சேஷ்டைகளை, தகுந்த தூண்டு கோல்களால் அதிகப்படுத்தலாம்; அல்லது மாற்றலாம்; அல்லது நிறுத்தியும் விடலாம். இந்த ஆராய்ச்சிகளின் படி, இளங்குழந்தைகளை எந்தெந்த மாதிரி கடிக்க வேண்டுமானாலும், அம்மாதிரியே அதன் நடக்கையை மாற்றக் கூடும். குழந்தைகளைத் திருடச் செய்தாலும் செய்யலாம். அல்லது ஞானியாகச் செய்தாலும் செய்யலாம். எல்லாம் பழக்கமே. தொட்டில் பழக்கங்களாகிய பயம், வெட்கம், கோபம் முதலிய வேண்டா நடத்தைகளை மாற்றி,தைர்யம், நாணமின்மை,கோபமின்மைமுதலிய வேண்டும் நடத்தைகளைக்காட்டச் செய்யலாம். இதுகாறும், மனிதனுடைய நடத்தைகளுக்கு நேர்காரணங்களாயுள்ள அவயவங்களைக்கவனியாது, வெறுஞ் சொற்களைமாற்ற முயன்று வந்தோம். இந்தமூடபழக்கத்தினால், மனிதருடைய நடவடிக்கை இன்றைக்கும் சமூக வாழ்வுக்கு நேர் விரோதமாகவே இருந்து வருகின்றது. இனி இந்த ஆராய்ச்சி பெருகப்பெருக, சமூக வாழ்வுக்கு எந்த நடத்தை வேண்டுமோ அந்த நடத்தைகளையே வரவழைக்க முடியும். இந்த ஆராய்ச்சியால் குலத்திற்குத் தக்கபடி குணமென்பது பொய்யாகி விட்டது. எந்தக் குலத்தில் பிறந்தாலும், அந்தக் குழந்தைகளை சமூக வாழ்வுக்கு வேண்டிய நடத்தைகளைக் காட்டவும்செய்யலாமெனப் பெறப்பட்டது. தொட்டில் பழக்க வழக்கங்களை வேண்டியவாறு தூண்டுதல் செய்யும் பட்சத்தில், நடத்தைகளும் வேண்டியவாறுவரும். ஆஸ்திக உலகமாக்கினாலும் ஆக்கலாம், நாஸ்திக உலக மாக்கினாலும் ஆக்கலாம். கடவுளர் எண்ணங்களும் (வார்த்தைகள்) அவைகளால் உண்டாகும் பக்தி, பயம், பிரார்த்தனை, துவேஷம்,வைராக்கியம் முதலிய நடத்தைகளும், தொட்டில் நற் பழக்க மூலமாகவே உலகில் இல்லாமலே செய்து விடலாம். இந்த நடத்தை ஆராய்ச்சி

யால், இதுகாறும் தெரியாதிருந்த தூண்டுகோல்களால் இனி உலகம் சீக்கிரத்தில் சீர்பெறுமென்பதற்கு ஐயமில்லை.

மனித நடத்தைகளுக்கு மூன்றுவித பழக்கங்கள் உளவாகத் தெரிகிறது. சித்திரத்திற்கு கைப்பழக்கமும் எண்ணத்திற்கு காவின் பழக்கமும், கோபம், தாபம், அன்பு, ஈகைக்கு நமது குடலும் காரணமென்று தெரிகிறது. கைகால்களால் நடக்கவும், ஓடவும் ஆடவும் அடிக்கவுமான நடத்தைகள் உண்டாகின்றன. இந்த நடத்தைகளை பழக்கத்தினால் செம்மையாக்கலாம். ''சித்திரமும் கைப்பழக்கம்'' என்றார் பெரியோர். எண்ணத்தையும் காவின் திறமையால் உண்டாக்கலாம். காவின், அதாவது காக்கு, தொண்டை பேசும் சதை, மூச்சுப்பை முதலிய பேசுதற்குவேண்டிய அவயவங்களின் சேட்டையை எண்ணமென்று வழங்குகின்றோம். எண்ணம், கியாபகம், நினைவு முதலிய நடத்தைகள் யாவும், நமது பேச்சின் பரிணாமங்களே. நாம் உரத்துக்கூவும்போது பேசுவதாகவும், நமக்கு நாமே பேசும்போது, நாம் எண்ணமிடுவதாகவும் சொல்கின்றோம். இந்த சித்தாந்தத்தின்படி, ஊமை எண்ணுகின்றானா? அல்லது நினைக்கின்றானா? என்று கேட்கலாம். நாம் வாத்தையால் பேசுவது போல் அவனும், சைகையால் பேசுகின்றான். அவனது சைகையே அவனுக்கு நினைவாகும். லாரா பிரிஜ்மான் என்ற ஊமைப் பெண் தான் தூங்கும்போது, கையாலும் விரல்களாலும், சைகை செய்துகொண்டிருந்தாள். இதுவே இவளுக்கு கனவாகும். நாம் எண்ணுகின்றோம் என்பதும், நமது காக்கு முதலிய அவயவங்களின் நடத்தையே. இந்த அவயவ நடத்தையை, ஏதோ விபரீதமாக எண்ணி, இதை சூட்சுமப் பொருளென்றும், மனமென்றும், கடவுள் ஸ்வரூபமென்றும் வழங்கி வந்தது நமது தொட்டில் பழக்கமென்று அறிவும்.

கோபம், தாபம், அன்பு, ஈகை முதலிய நடத்தைகள், நமது குடல்களின் அசைவுகளே. ''குடல் நடுங்கிற்று'' என்று வழங்கும் அனுபவவார்த்தைகளாலும், பயத்திற்கு குடலே காரணமென்று நன்கு விளங்கும். பாம்பைக்கண்டு சிலர் பயப்படுகின்றார்கள்; இருளைக் கண்டு சிலர் பயப்படுகின்றார்கள். இந்த நடத்தைகள் தொட்டில் பழக்கங்களே. ஆனால், இந்த பழக்கங்களை, குடல்களின் நடவடிக்கைகளைக்கொண்டு மாற்றிவிடலாம். பயங்கொள்ளிகளைப் பயப்படாமலும் செய்யலாம். இதை பரீட்சை

மடமையா? அறிவுடமையா?

(சாக்கோட்டை எஸ். ஆர். சாமி.)

ஜன சமூகத்திலுள்ள கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும், எழ்மைக்கும், இழிவுகளுக்கும், காரணம் அச்சமூகத்தின் அறிவு நிலைமையையும் பொறுத்ததாயிருக்கிறது. பிறகுதான் கல்வி நிலைமையையும், செல்வ நிலைமையும் என்று கூடசொல்லலாம். கல்வி நிலை சரியாயிருந்தாலோ, அல்லது செல்வ நிலை சரியாயிருந்தாலோ, அல்லது இரண்டும் சேர்ந்து இருந்தாலோ மட்டும் போதாது. அங்கே அறிவு நிலைமையும் இருத்தல் வேண்டும். அஃதின்றேல் கல்வியும், செல்வமும்

செய்துமிருக்கின்றார்கள். நன்மைகளையே ஒருவன் செய்து வரவேண்டுமானால் அந்தக் காரியத்திற்குரிய குடல் பாகங்களைப் பயிற்றுவோமானால் அவன் நல்ல காரியங்களையே செய்து வரக்கூடும். ஒருவன் செய்துவரும் பெரும்பான்மையான காரியங்கள், அவன் இளமையிலிருந்து பழகியபடி செய்கின்றானே யொழிய கர்மத்தாலுமல்ல, கடவுளாலுமல்லவென அறிக. ஆதலின் ஒருவனுடைய துர்ச்செய்கைகளுக்கும் நற்செய்கைகளுக்கும் எந்த ஜன சமூகத்தில் பழகினானோ அந்த சமூகமே அதற்குக் காரணமாகும்.

இந்த ஆராய்ச்சியில் ஏற்படும் முடிவுகள் என்னவெனில் மனித்ன் நடையை சமூகங்களுக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளலாம்; வேண்டிய நடையை அதன் அவயவங்களைக் கொண்டு திருத்திக்கொள்ளலாம்என்பதே. இதனை அறியாது, மனத்தைக்கற்பித்தல் என்றும் பயபக்தியால் நடத்தை சீர்படுமென்றும், கடவுளருளால் நன்மை பயக்குமென்றும் சொல்லி வந்ததெல்லாம் வீண் சொற்களே. நமது உடலின் உறுப்புகளை விசாரித்தல், நமது தற்கால கடமைகளாகும். அந்த விசாரணையின் பலனைக்கொண்டு நமது மக்களை வளர்த்தலே சத்புருஷ லட்சணமாகும்.

தக்க வழியில் பயன்படாமல் போய்விடும். இப்படித்தான் ஆகிக் கொண்டிருக்கிறது அனுபவத்திலும்.

எல்லா நலன்களும் இருந்தும், மக்களுக்கிருக்கும், பகுத்தறிவு பயன்படாவிடில் என்ன பிரயோஜனம்?

கல்வி கற்றவர்களுக்கும் அல்லாதவர்களுக்கும், செல்வம் உடையவர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் பகுத்தறிவுயிருக்கிறது. அறிவு சிலருக்குத்தான் உண்டு; சிலருக்கு இல்லை என்ற விதியிலக்கு இல்லை. ஆனால் பகுத்தறிவைப் பயன்படுத்தாதவர்கள் இந்நாட்டில் நிறையஇருக்கிறார்கள். இந்த ஒரு குறையாலேயே, மக்கள் மேல்கண்ட அவ்வளவு குறைகளுக்கும் உட்பட்டு விடுகின்றார்கள்.

சமீப காலத்தில் திருவையாற்றில் ஒரு கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடந்தது. அந்த கும்பாபிஷேகத்துக்கு பதினாயிரக்கணக்கான் ரூபாய்களைச் செலவு செய்து நடத்தி வைத்தவர் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார். அவரிடம் கல்வியில்லையா? செல்வம் இல்லையா? அல்லது அறிவுடமைதான் இல்லையா? அந்த அறிவுடமையைப் பயன்படுத்தவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஏனெனில் இந்நாட்டில் கோடிக்கணக்கானோர் வேலையில்லையென்று திரியும் இந்நாளில்—கோடிக்கணக்கானோர், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, படுக்கயிடமின்றி பசி, பசி என்று தவித்துக் கொண்டிருக்கும் இந்நாளில்-கோடிக்கணக்கான குழந்தைகள், தக்க போஷணையும், ஆகாரமும் இன்றி வாடிவதங்கி மடியும் இந்நாளில்-பதினாயிரக்கணக்கான ரூபாய்களை கல்லுக்கும், செப்புக்கும் பாழாக்கிவிட்டு, பார்ப்பனர் கையில் அக்கோவிலை ஒப்புவித்துவிட்டுச் சென்ற காட்சியைப் பாருங்களேன். இவ்வளவு ரூபாய்களுக்கும் அவ்வூரிலேயே ஒரு நெசவுச்சாலை ஏற்படுத்தப்படாதா? அல்லது தொழிற்சாலை கட்டி முடிக்கப்படாதா? அல்லது ஒரு பெரிய பள்ளிக்கூடம் அவர் பெயரால் ஏற்படுத்தப்படாதா? அல்லது "குழந்தைகள் சம்ரக்ஷணை விதி" என்பதாக ஒரு அறநிலையம் ஏற்படுத்தப்படாதா? அல்லது ஒரு விவசாயப் பண்ணையை ஏற்படுத்தவும், திக்கற்ற ஆண் பெண்களுக்கும், அறக்கூழ்ச்சாலை ஏற்படுத்தவும்படாதா? இவ்வளவு காரியங்களுக்கும் உபயோகப்படும் பணமும், முயற்சியும் எப்படியாயிற்று? என்பதை யோசித்துப் பாருங்கள். இந்நாட்டில் ஏற்பட்டிருக்கும், கஷ்டங்களுக்கும்,

இழிவு, கொடுமை, வறுமை, முதலியவைகளுக்கும் ஒரு அண்ணா மலை செட்டியாரும், ஒரு திர்வியம் பிள்ளையும், ஒரு சபாரெத்தினம் செட்டியாரும் ஏற்பட்டு விட்டால் போதுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

"குபேர நாடு" என்று சொல்லக்கூடிய செட்டிமார் நாட்டில்தான் பெரும் பெரும் கனவந்தர்களும், பெரும் பெரும் மாணிக்கங்கள் கொண்ட செட்டிமார்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சியும், பணமும், பாழாய்க் கிடக்கும் கோவிலைப் புதுப்பிக்கவும், அதற்கு மான்யம் விடவும், அவைகளைப் பொறுக்கிச் சாப்பிட சில பார்ப்பனர்கள் வந்து கூடவுமான காரியங்களுக்குத்தான் பயன் படுகின்றதே தவிர வேறு பயன் என்னவென்று பாருங்கள். இப்படிச் செய்வதால் "வேலை இல்லாத கூலிகளுக்கும் இதர தொழில்காரர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டது" என்று சிலரால் கூப்பாடு போடப்படுகிறது. ஆமாம். உண்மைதான். அது எத்தனை நாட்களுக்கு என்று கேட்கின்றேன். 2, 3-மாதங்கட்கு அல்லது 4-மாதங்கட்கு மட்டுந்தானே! பிறகு என்செய்வது? மேற்கூறிய காரியங்கட்கு அப்பொருள் பயன்பட்டால் காலம் உள்ளளவும் அவை பயன்படுமே! இப்படிச் சொல்வதில் எது மடமை? எது அறிவுடைமை? என்று பாருங்கள்.

இந்நாட்டிலுள்ள பணக்காரர்களின்——கனவந்தர்களின் மனம் என்று அவரவர்களின் வைதீக மனப்பான்மையிலிருந்து, மனிதாபிமான மனப்பான்மை ஏற்படுகின்றதோ அன்றுதான் நாட்டின் விடுதலை. அன்றுதான் மக்களின் கவலை ஒழியும். அல்லது என்று இந்நாட்டிலுள்ள கோவில்களின் சொத்துக்களையும், பணக்காரர்களின் தேவைக்கு மிஞ்சிய சொத்துக்களையும், அரசாங்கம் கைப்பற்றுமோ அன்றுதான் ஜனசமூகத்தின் சங்கடங்கள் நிவர்த்தியாகும்; அன்றுதான் மக்களுக்கு சுபீட்சம் ஏற்படும் என்பதை இப்பொழுதே குல்லிவெட்டுகளில் வெட்டிவைத்து விடலாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்வது எந்த அரசாங்கமேயாயினும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை.

வீணே காங்கிரஸ்காரர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர் "சுயராஜ்யம், விடுதலை, பூரண சுயராஜ்யம், பூரண விடுதலை தேச சேவை" என்று சொல்லி, மக்களுடைய முட்டாள் தனத்தையும், அறியாமையையும், உபயோகப்படுத்திக்கொள்கின்றனர்-

ராஜ்பம் யாரிடமிருந்தபோதிலும் அந்த நிலைமை ஏற்பட வேண்டும். மதத்திலுள்ள ஊழல்களை, பழக்க வழக்கங்களிலுள்ள கேடுகளை, ஜாதியின் பேரால், கடவுளின் பேரால் மோக்ஷத்தின் பேரால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இன்னல்களைப் போக்குவதற்கொண்டே "எங்கள் போராட்டம் எல்லாம் அந்நியரிடம், எங்கள் நோக்கமெல்லாம் அரசியல் நோக்கங்கள்" என்றுரைமாற்றிக் கொண்டிருப்பது மன்னியில், வேடிக்கொடுமைகளுக்குக் காரணபூதங்களாயுள்ளவைகளை ஆதரிக்கிறார்கள் என்றால், இவர்கள் மக்களை எங்கே கொண்டு போகிறார்கள்? என்று பாருங்கள். அல்லது இவர்களை நம்பி வாழலாமா? என்று பாருங்கள். இந்தப்படி ஆங்காங்குள்ள குறைகளையும், கொடுமைகளையும் எடுத்துச் சொல்லுவது மடமையா? அறிவுடைமையா? என்று வாசகர்களே யோசியுங்கள்.

ஒருநாள் மாலை நேரம். முன்பின் அறிமுகமில்லாத ஒருவர், சாலையில் நின்றுகொண்டிருந்தார். அவர் என்னைப் பார்த்து ஒரு "நோட்டீஸ்" கொடுத்தார். அதில் "பாவம் எப்படித் தீரும்" என்ற தலைப்பில், பாவத்தைத் தீர்த்துக்கொள்ள பிறின்ற மதம் சொல்லும் சில "வழிகள்" இருந்தன. வாங்கிப்பார்த்துவிட்டு நின்றேன். அதற்கு அவர் "உங்கள் அபிப்பிராயம் என்ன? இந்து மதத்தின்பாவம் தீர "வழிகள்" இருக்கின்றனவே அதைவிட எங்கள் மதம் சொல்லுவது எளிதா? கடினமா?" என்று கேட்டார். சரி, எனக்கொரு சந்தேகம். "பாவம் என்றால் என்ன?" என்றேன். "தீய செய்கை" என்றார். "சரி, தீய செய்கையை யார் செய்கிறது. யார் செய்யவில்லை" என்றேன். "தீய செய்கைக்கு மனிதனே காரணம்" (கடவுள் என்று சொல்லுவார்களா) என்றார். "சரி, தீய செய்கைக்கு யார் காரணம்?" என்றேன். அதற்கும் மனிதன்தான் காரணம்" என்றார். ஆகவே இரண்டு செய்கைக்கும் மனிதனே காரணமென்றால் மனிதனே திருந்திக் கொள்ளலாமல்லவா? என்றேன். "ஆமாம்" என்றார். கடவுள் என்ற ஒன்றோ பிசாசு என்ற ஒன்றோ மனிதனது வாழ்க்கைக்குத் தேவையில்லையல்லவா? என்றேன். வேறு வழியில்லை. விழித்தார். "ஆமாம், தேவையில்லைதான்" என்றார். விலங்கினங்களுக்கு "பாவ

புண்ணியம்" உண்டா? என்றேன். "இல்லை" என்றார். ஆகவே மனிதனுக்கும், விலங்கினங்களுக்கும்; மற்ற உயிர்களுக்கும் "கடவுள் தேவையில்லை என்று ஏற்படுகிறதே" என்றேன். "ஆமாம்" என்று சிரித்தார். பிறகு எனது தோழர் ஒருவர் வந்தார். வந்தவர் எங்கள் சம்பாஷணையில் கலந்து கொண்டு அவருக்கும் சில சந்தேகங்கள் இருப்பதாகவும், அதைத் தெளிவு படுத்தினால் தான் கிறிஸ்தவ மதத்தைத் தழுவ ஆட்சேபமில்லை யென்றும் தெரிவித்தார். முதலில் "சரி" என்றார். பிறகு "புத்தகத்தைப் பார்க்க வேண்டும்" என்றார். எங்கள் சந்தேகம் தெரியாமலா புத்தகத்தைப்பார்க்க வேண்டும்? என்று எனது தோழர் கேட்டார். அவர் சிறிதுயோசித்துவிட்டு, "நான் போய் வருகிறேன். வீட்டில் அலுவல்கள் இருக்கின்றன" என்று மெது வாக நழுவி விட்டார். இவர் கிறிஸ்தவ மதப் பிரசாரகர் என் றும், இவருக்கு மாதம் ரூ. 42-8-0 சம்பளம் கொடுக்கப்படுகிற தென்றும், இவர் பெயர், ஊர் யாவற்றையும் அவரைக் கொண்டே தெரிந்து கொண்டு "போய் வாருங்கள்" என்று சொல்லிடத்தான்பிடினோம். என் இதைச் சொல்லுகின்றேன் என் றால், எங்கு பகுத்தறிவு உபயோகப்படுகிறதோ அங்கு மதம், கடவுள், [illegible]கூதம், பாவம், புண்ணியம், படித்த மதப்படிப்பு எல்லாம் பறந்தோடி விடுகின்றன பாருங்கள். அதற்காகத்தான் அறிவை உபயோகப்படுத்து என்று சொல்லுகிறோம். பகுத் தறிவைப் பயன்படுத்துவது அறிவுடமையா? அல்லது மட மையா? என்பதை தோழர்களே சிந்தியுங்கள்!

மக்களின் நோயும், சொற்பவருவாயும், சொற்ப கல்வியும், கல்லுக்கும், மண்ணுக்கும், "காட்டேரி"க்கும் பயன்படுகிறதே யல்லாமல், கல்வி வளர்ச்சிக்கும், அறிவு விருத்திக்கும், சந்தோ ஷத்திற்கும், திருப்திக்கும் பயன்படுத்தப்படவில்லையே! எங் கேயோ ஓரிடத்தில் கும்பாபிஷேகமென்றால் அப்படியே திரண்டு, பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு ஓடவும், மகா மகம் என்றால், அங்கேயும், லக்ஷக்கணக்காய், மனிதர்கள் என் போர் உருண்டு, திரண்டு ஓடிப்போய், சேற்றில் புரண்டு விட்டு, பெரும்வியாதிகளையும், கொள்ளை நோய்களையும், சம்பாதித்

துக்கொண்டு வருவதுமான காரியங்களுக்குத்தானே பயன்படுகிறது!! இல்லாவிட்டால், "சாக்கோட்டையில் ஏன் "ஆண்டு விழா" என்று ஒன்று நடத்த வேண்டும்? "என் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சுயமரியாதை செய்து கொள்ளவில்லை உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள் பார்ப்போம்" என்று கேட்கத்தான் அவர்கள் அறிவு பயன்படுகின்றதே தவிர, என் இந்நாட்டு மக்கள் 100-க்கு 82-பேர் கல்வியற்ற காட்டு மிராண்டிகளாயிருக்கிறார்கள்? என்றோ, என் ஒரு சிலர் தங்களைப் பிராமணர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்? என்றோ, என் இந்நாட்டில்உள்ள கோடிக்கணக்கான மக்கள் நாளைக்கு என் செய்வது என்று கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு ரோடுகளிலும் கோப்புகளிலும், குடிசைகளிலும் கிடந்து புரளுகின்றார்கள்? என்றோ, என் இந்நாட்டில்ஒரு சிலரிடம்சொத்துக்கள், பொருள்கள் நிறையசேர்ந்து பாலும் பழமும் சாப்பிட்டுவிட்டு பஞ்சணை மெத்தையில் உருளுகின்றார்கள்? என்றோ, என் இந்நாட்டில் வேப்பிலையை இடுப்பில் சுற்றிக்கொண்டு வீதி வீதியாய் கோவிந்தா போடவும் அதைச் சிலர் மாடியிலிருந்து வேடிக்கை பார்க்கவும் நேர்ந்தது? என்றோ, அல்லது என் இந்நாட்டில் மனிதர்கள் என்போர், நாயிடமும் பன்றியிடமும் மாட்டிடமும் சண்டையிட்டுக் கொண்டு அவைகளைப் பிடித்துத் தள்ளி விரட்டி, எச்சிலையை நக்குகிறார்கள்? என்றோ கேட்க அவர்கள் அறிவு இடங்கொடுக்க வில்லையே! அவர்கள் அறிவு விசாலமடையவில்லையே!! யோசித்துப்பாருங்கள், இவைகளையும் இன்னும் என் இந்நாட்டு மக்களில் பலர் தங்கள் தங்கள் மனைவி மக்கள், தாய் தகப்பன் தவிக்கத் தவிக்க, அழ அழ, கதறக்கதற இந்நாடுவிட்டுப் பிறநாடு செல்லுகிறார்கள்? என்றோ, இந்நாட்டில் அவர்கள் எல்லாம் கவலையற்றுப் பிழைக்க மார்க்கமில்லையா? என்றோ கேட்கவும் சந்தேகப்படவும் அவர்கள் அறிவு இடங்கொடுக்கவில்லையே!!! என்பதை நினைத்துப்பாருங்கள்.

ஆகவே இவைகள் போன்ற துன்பங்களையும்,சூழ்ச்சிகளையும் கொடுமைகளையும் எடுத்துச் சொல்லி அத்துன்பங்களும்

தெய்வ வரி.

நம் தேசத்தில் நாம் கொடுக்கும் வரிக்கு அளவேயில்லை. அரசாங்க சம்பந்தத்தில் பூமி வரி, வருமான வரி, கள்ளு வரி, துணி வரி, சாமான் வரி முதலியவைகளோடு முனிசிபாலிட்டி வரி, போர்டு வரி, லஞ்ச வரி, மாமூல் வரி என்று இவ்வாறாக அதேக வரிகளைக் கொடுக்க வேண்டி இருக்கிறது. இதல்லாமல் தெய்வத்திற்காகவும், மதத்திற்காகவும் கொடுத்துவரும் வரி அளவுக்கு மீறினவைகளாய் இருப்பதோடு நமக்கு யாதொரு பிரயோஜனத்தையும் கொடுக்காமல் மேற் சொல்லிய அரசாங்க சம்பந்த வரிகளின் அளவைவிட எறக்குறைய அதிகமாகவே கொடுக்கப்படுகிறது. அன்றியும், இவ்வரிகளால் தத்துவ விசாரணையும், மத விசாரணையும் நாம் கொஞ்சமும் செய்வதற்கில்லாமல் செய்து, நமது மூட நம்பிக்கைபால் பிழைக்கவேண்டிய சிலரின் சுகமைக்காக அவர்கள் எழுதிவைத்ததையும் சொல்வதையும் நம்பி நாம் கஷ்டப்பட்டு வரி செலுத்துவதல்லாமல் வேறு என்ன உண்மை லாபம் அடைகிறோம்? தெய்வத்தை உத்தேசித்தோ, ஸ்தலத்தை உத்தேசித்தோ, தீர்த்தத்தை உத்தேசித்தோ, நமது பிரயாணச் செலவு எவ்வளவு? பூஜை, பூசாரி காணிக்கை, பிராத்தனை முதலியவற்றிற்காக ஆகும் செலவு எவ்வளவு? சாதாரணமாய் திருப்பதி வெங்கடாசலபதி என்கிற ஒரு தெய்வத்திற்கு மாத்திரம் வருடம் ஒன்றுக்குப் பதினெட்டு லட்சம் ரூபாய் வரும்படி வருகிறது.

கொடுமைகளும், சூழ்ச்சிகளும் ஒழிய நேரிய மார்க்கங்களையும் சொல்லும் சுயமரியாதை இயக்கத்தினர் மனப்பான்மை மடமையா? அறிவுடமையா? என ஜனசமூகமே! யோசித்துப் பார்ப்பாயாக!

இதைத் தவிர மேற்படி யாத்திரைக்காரர்களுக்கும் அங்குள்ள பூசாரிகளுக்காகவும், மற்றும் சில தர்மத்திற்காகவும், அங்கு போகும் ரயில் சத்தம் வண்டிச் சத்தத்திற்காகவும் ஆகும் செலவு எவ்வளவு? இது போலவே இமய முதல், கன்னியாகுமரி வரை உள்ள தீர்த்தம், ஸ்தலம், கோவில் முதலியவைகளுக்கு மக்கள் போக்கு வரவு செலவுகள் முதலியவைகளை நினைத்துப்பார்த்தால் உடல் நடுங்குகிறது. இத்தன்றி வீடுகளில் நடைபெறும் வைதீகச் சடங்குகளான கலியாணம், வாழ்வு, சாவு, திதி இவைகளுக்காகவும், அதை நடத்திவைக்கவும் புரோகிதர் பிராமணர்கள் செலவும் எவ்வளவாகிறது? இவைகளை எல்லாம் மக்களின் பேராசையும், மூடநம்பிக்கையும் தானே செய்விக்கின்றன. தாங்கள் எவ்வளவு கொடுமையும் பாவமும் செய்திருந்தாலும் மேற்கூறிய தெய்வயாத்திரையோ, வைதீகச் சடங்கோ செய்வதால் தப்பித்துக்கொள்ளலாமென்றும், தங்கள் யோக்கியதைக்கு மேல் எதை விரும்பினும் பெற்று விடலாமென்றும் நினைக்கிற பேராசைகளும் இவைகளுக்குக் காரணமாய் இருப்பதன்றித் தங்கள் முன்னோர்கள் அவர்களின் குண கர்ம யோக்கியதையைப் பொறுத்ததல்லாமல், தாம் வைதீகச் சடங்கு செய்து பிராமணர்களுக்குப் பணம் கொடுப்பதன் மூலமாய் அவர்களை மோட்சத்திற்கு அனுப்பிவிடலாம் என்கிற மூடநம்பிக்கையும் இவர்களை இப்படிச் செய்விக்கச் செய்கின்றது. இதனால் மக்கள் ஒழுக்கம் பெறுவதற்கு இடமுண்டாகின்றதா? ஒருவர் ஏமாறவும் மற்றொருவர் ஏமாற்றவும் தானே பழக்கப்படுகிறது. கடவுளின் உண்மைத் தத்துவத்தையும் தங்கள் தங்கள் செய்கைகளின் பலன்களையும், மக்களுக்குப் போதித்து வந்திருந்தால் இவ்வளவு பேராசையும், செலவும், தெய்வத்தின் பெயராலும் ஏமாற்றுதலாலும் ஏற்பட்டிருக்கவே முடியாது. தெய்வத்திற்காகச் செலுத்தப்படும் காணிக்கைகள் என்னவாகின்றன? வைதீக சடங்குகளின் பலன்கள் என்னவாகின்றன? இவ்விரு கர்மங்களையும் நடத்தி வைப்பவர்களின் யோக்கியதை என்ன? என்பதை மக்கள் கவனிப்பதில்லை. காளை மாடு கன்றுப் போட்டதென்றால் கன்றுக் குட்டியைப் பிடித்துக் கொட்டத்தில் கட்டு என்றே சொல்லி விடுகிறோம். காளைமாடு எப்படிக் கன்றுப்போடும் என்பதை நாம் கவனிப்பதே இல்லை. பூசாரிக்குப் பணம் கொடுப்பதாலும், காணிக்கைபோடுவதாலும் நமது குற்றச் செயல்கள் எவ்வாறு மன்னிக்கப்படும்? நமது ஆசைகள்

எவ்வாறு நிறைவேறும்? தெருவில் போகும் பிராமணர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு அரிசி, பருப்பு, பணம், காசு, கொடுப்பதாலும் அவர்கள் ஏதோ சில வார்த்தைகளை உச்சரிப்பதாலும் நமது முன்னோர்கள் எப்படிச் சுகப்படுவார்கள் என்று யோசிப்பதே இல்லை. இவைகளால் நமது பொருள், நேரம், தத்துவம் வீணாகப் போவதல்லாமல் ஒரு மனிதன் கொலை, கொள்ளை முதலிய துஷ்டச் செயல்கள் செய்யும்போது தன்னுடைய பணச் செருக்கையும், வக்கீல்களையும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதையும் நினைத்துக் கொண்டு, இவர்களால் தப்பித்துக்கொள்ளலாமென்று எப்படித் தைரியமாய்ச் செய்கிறானோ, அப்படியே இந்த க்ஷேத்திரங்களையும், காணிக்கைகளையும், புரோகிதர்களையும் நம்பிக்கொண்டு தைரியமாய்க் குற்றங்கள் செய்கிறான். அதோடு மட்டும் அல்லாமல் தேசத்தில் சோம்பேறிகளும், கெட்டகாரியங்களும் வளர்கின்றன. கல்ல யாத்திரை ஸ்தலம் என்று சொன்னால் கல்ல வியாபாரஸ்தலம் என்பது தான் பொருளாக விளங்குகின்றது. தேர் திருவிழா ஸ்தலங்களுக்குப் போனவர்களுக்கும், யாத்திரை ஸ்தலங்களுக்குப் போனவர்களுக்கும் அநேகமாக இதன் உண்மை விளங்காதிருக்காது. கல்ல புரோகிதர்கள் என்போர்கள் தங்கள் வரும்படியை வியபசாரத்திற்கும் சூதுக்கும் போதை வஸ்துக்களுக்குமே பெரும்பான்மையாக உபயோகித்து வருகின்றனர். வைதிகச் சடங்கைப்பற்றி ஒரு பெரியாரால் சொல்லப்பட்ட ஒரு சிறு கதையைச்சொல்லி இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் ஒரு புரோகிதர், ஒருவருக்கு வைதிக கர்மம் செய்து வைத்துக் கொண்டிருக்கும்பொழுது தான் கிழக்கு முகமாக நின்று தன் இரு கைகளாலும் தண்ணீரை அள்ளி இறைத்துக்கொண்டிருந்தார். அதைக் கண்ட ஒரு பெரியார் தான் மேற்கு முகமாய் நின்று தன் இரு கைகளாலும் தண்ணீரை அள்ளி இறைத்தார்.

புரோகிதர்:—ஐயா, என்ன மேற்கு முகமாய்ப் பார்த்துத் தண்ணீரை இறைத்துக்கொண்டிருக்கிறீர்?

பெரியார்:—நீங்கள் கிழக்கு முகமாகப் பார்த்து எதற்காகத் தண்ணீர் இறைக்கிறீர்கள்?

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)⊜(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0

பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

கான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3 0

மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0

கடவுள் ... ... ,, 0 5 0

கான் சமூகபவாதியானதேன்? ... ... ,, 0 3 0

வால்ட்டேர் ... ... ,, 0 4 0

பேய்-பூதம்-பிசாசு ... ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0

பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0

ஷி 2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0

ஷி 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0

மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	3	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (முன்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கமும் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கூதர் லூஷாநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னாட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புதுரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யமுகட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unnai vilakam Press, Erode